Registered as a newspaper இலவசப் பிரதி

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

NEW NAVENA
NAKAIYAKAM
நியூ நவீனா நகையகம்
189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
189, Kasthuriar Road,
Jaffna.
(சி-319)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 24 (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 89

## மீள்குடியேற்றத்துக்கான இராணுவத்தின் நிபந்தனைகள்

# இறுக்க நிலையை தளர்த்த பேனாட் வன்னி வருகிறார்

## தாய்லாந்து பேச்சுக்கு முன் சுமுகநிலைக்கு முயற்சி

(கொழும்பு)

**உயர்பாதுகாப்பு வலயங்களினுள் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக யாழ்.மாவட்டத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா விடுத்த நிபந்தனைகளால் - தற்போது ஏற்பட்டுள்ள 'இறுக்கநிலையைத்' தளர்த்தும் பொருட்டு - அரசின் சமாதான செயலணித் தலைவர் பேனாட் குணதிலக கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளார்.**

உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தற்போது உருவாகியிருக்கும் முறுகல் நிலையைத் தணிக்கும் வகையிலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்முயற்சியின் ஒருகட்டமாக அரசின் சமாதான செயலணியின் தலைவர் பேனாட் குணதிலக அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்டு அடுத்தவாரம் கிளிநொச்சிக்கு செல்லவுள்ளார். தற்போது உருவாகியிருக்கும் இறுக்கமான சூழலைத் தளர்த்தி சமாதானப் பேச்சுக்களை தங்குதடையின்றி நகர்த்துவதற்காகவே இம்முயற்சி மேற்கொள்ளப்படவிருப்பதாக அரசாங்கத்தரப்பிலிருந்து தெரியவருகின்றது.

பாதுகாப்பு விடயங்களை ஆராயும் பாதுகாப்பு உபகுழுக்கூட்டத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஹக்கீம் - அதாவுல்லா குழுவினர் மோதல்

(அம்பாறை)

அட்டாளைச்சேனையில் நேற்று மாலை முஸ்லிம் காங்கிரசின் ஹக்கீம் அணியினருக்கும் அதாவுல்லா அணியினருக்கும் இடையில் பெரும் கைகலப்பு ஒன்று நடைபெற்றுள்ளது. இதுபற்றித் தெரியவருவதாவது, அட்டாளைச்சேனையில் இன்று நடைபெறவிருந்த ஹக்கீம் அணியினரின் பொதுக்கூட்டத்திற்காக நேற்று அப்பகுதியில் மேடை அமைக்கும் முயற்சியில் அவரது ஆதரவாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது அங்கு வந்த எதிரணியான அதாவுல்லா குழுவினர் மேடை அலங்காரத்தில் ஈடுபட்டிருந்த ஹக்கீம் குழுவினரை தாக்கத் தொடங்கினர். இதைத் தொடர்ந்து அங்கு பெரும் கைகலப்பு மூண்டது.

இதன்போது மேடை சேதமாக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கட்சியைப் பலப்படுத்தியதும் அரசை ஜனாதிபதி கலைப்பார்

### சரத் அமுனுகம தெரிவிப்பு

பொதுஜன ஐக்கிய முன்னணி அதன் பலத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டதும் தற்போதைய அரசாங்கத்தை ஜனாதிபதி கலைத்து விடுவார் என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் பலவீனமடைந்தவுடன் ஜனாதிபதி இதனைச் செய்வார் என்றும் குறிப்பிட்டார்.

மாத்தளையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றிலேயே அவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 200 படகுகளில் இந்திய மீனவர்கள் தீவகக் கடலில் நேற்றிரவு அத்துமீறல்

(நெடுந்தீவு)

இருநூறுக்கும் மேற்பட்ட இந்திய மீனவர்களின் ரோலர் படகுகள்- நேற்றிரவு-புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு கரையோரப்பகுதிகளில் அத்துமீறி வந்து மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்தன.

இலங்கையின் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டதன் பின்னர் இந்திய மீனவர்கள், வாரத்தில் திங்கள் புதன், சனிக்கிழமைகளில் இலங்கைக் கடற்பகுதிகளினுள் அத்துமீறி வந்து மீன்பிடித்தொழிலை மேற்கொண்டுவருகின்றனர்.

இதனால் தீவக மீனவர்கள் திங்கள், புதன், சனிக்கிழமைகளில் மீன்பிடித்தொழிலிற்குச் செல்வதில்லை. அவர்களது வலைகள் ரோலரினால் அறுக்கப்பட்டுச்செல்கின்றன. இதனால தீவக மீனவர்கள் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகி வருகின்றனர். (113)

## சாரதி அனுமதிப்பத்திரம் அடுத்த ஆண்டு அவசியம்

### எடுத்துச் செல்லாதோர் மீது சட்ட நடவடிக்கை

யாழ்.மாவட்டத்தில் மோட்டார் வாகன உரிமையாளர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பது 2003 ஆம் ஆண்டிலிருந்து கட்டாய நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளது.

சாரதி அனுமதிப் பத்திரமின்றி மோட்டார் வாகனம் செலுத்துவோர் மீதும், தலைக்கவசம் அணியாமல் செல்பவர்கள் மீதும், ஒரு மின் விளக்குடன் செல்லும் வாகனங்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்துப் பொலிஸாருக்கு யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் உத்தரவிட்டுள்ளார்.

## மீள்குடியமர்வு கொடுப்பனவுக்கு புதிய விண்ணப்பப் படிவங்கள்

(யாழ்ப்பாணம்)

மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்குவதற்காக ஒவ்வொரு குடும்பத்துக்கும் புதிய விண்ணப்பப் படிவம் வழங்கப்படவுள்ளது.

மேற்படி விண்ணப்பப்படிவங்களை மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வழங்கவும், அவற்றை பூரணப்படுத்தி மீண்டும் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் யாழ். செயலகம் மேற்கொண்டு வருகிறது. மிக விரைவில் மேற்படி குடும்பங்களுக்கான பதினைந்தாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதற்காகவே இந்த ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன. (க)

## சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு காணாமற்போனவர்கள் விவகாரம்

### தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வட பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனவர்களின் விவகாரம் சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

காணாமற்போனவர்களின் பாதுகாவலர் சங்கத்தினதும், அன்னையர் முன்னணியினதும் உறுப்பினர்கள் அடங்கிய தூதுக்குழு ஒன்று நேற்று விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்தது, இச் சந்திப்பின்போது மேற்படி விவகாரம் குறித்து ஆராயப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் ஜென. பொன்சேகாவின் கடிதத்தில் எழுத்துப் பிழைகள்

(கொழும்பு)

உயர்பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியேற்றத்திற்கான நிபந்தனைகளை விதித்து யாழ்.பிராந்திய இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவினால் அனுப்பப்பட்ட கடிதத்தில் இலக்கண மற்றும் எழுத்துப்பிழைகள் காணப்பட்டதாக லண்டனிலிருந்து வெளியாகும் 'தமிழ் கார்டியன்' இதழ் கூறுகின்றது.

இதேவேளை - அவரது கடிதத்தின் முழு விபரத்தையும் அந்த இதழ் வெளியிட்டுள்ளது. அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது- உயர்பாதுகாப்பு வலயத்தில் ஏற்படுத்தப்படும் எந்தவொரு மாற்றமும் தெற்கு ஆசியாவில் அமைதியை ஏற்படுத்தமாட்டாது. அங்கிருந்து வரும் அரசியல் விமர்சனங்களை ஒதுக்கிவிட முடியாது.

மக்களை மீளக்குடியமர்த்த எத்தகைய ஏற்பாடுகள் செய்யப்பட்டாலும், படையினரின் பாதுகாப்போடு எந்தவிதமான இணங்கிப்போகும் தன்மையும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



நிபந்தனைகளே பிழையெண்டேக்குள்ள எழுத்தென்னப்பா செய்யும்...?

## காணாமற்போனோரின் பாதுகாவலர் பிரதமரின் செயலாளரைச் சந்திப்பர்

(யாழ்ப்பாணம்)

கைது செய்யப்பட்டு காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் ஜனவரி 8 ஆம் திகதி பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

அன்றைய தினம் பாதுகாப்பு அமைச்சு, புனர்வாழ்வு அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்களும் இச் சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளனர்.

96,97 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமற்போன தமது உறவுகளைப் பற்றிய தகவல்களைப் பெற்றுத்தருமாறு இச்சந்திப்பின் போது கோரவிருப்பதாக சங்கத்தினர் தெரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

**மூன்றாம் நாள் 29.12.2002 ஞாயிற்றுக்கிழமை**

கலைநிகழ்வு: முற்பகல் 10.00 மணி

## 150 ஆவது ஆண்டு (1852-2002) நிறைவை முன்னிட்டு

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர், ஊழியர்களை பாராட்டுதலும் கௌரவித்தலும்

இடம் : கல்லூரி கலை அரங்கம்
தலைமை : திரு. க. விநாயகலிங்கம் *(ஓய்வுபெற்ற அதிபர்)*
விருந்தினர்கள் : திரு. சின்னையா சிவநேசன் *(முன்னாள் அதிபர்)*
திரு. வி. பொன்னம்பலம்
*(தலைவர், பழைய மாணவர் சங்கம், கொழும்பு)*
திரு. இ. சிவஞானசுந்தரம்
*(கோட்டக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய்)*

**நிகழ்ச்சி நிரல்**

* அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோரை அழைத்துவரல்.
* மங்கலவிளக்கேற்றல்
* இறைவணக்கம்
* வரவேற்புரை : திரு. எஸ். கே. தங்கவேல் *(விழாச்சபைச்செயலாளர்)*
* ஆசியுரை : சிவஸ்ரீ. பூ. கீதச்சந்திரக்குருக்கள் *(பிரதமகுரு ஸ்ரீசித்திர வேலாயுதர் கோயில், கோப்பாய்)*
  வண. பிதா. ஏ. எவ். செலஸ்ரீன் அடிகள் *(பங்குத் தந்தை கோப்பாய், திருநெல்வேலி)*
* தலைமையுரை
* வாழ்த்துரை வழங்குவோர்
  திரு. க. இ. குமாரசாமி *(பழைய மாணவர்)*
  திரு. எஸ். செல்லத்துரை *(முன்னாள் பா. அ. சங்கச்செயலாளர்)*
  திரு. ஆ. சக்திவடிவேல் *(உபதலைவர், பா. அ. சங்கம்)*
  திருமதி. ச. கனகரத்தினம் *(பழைய மாணவி, இளைப்பாறிய பிரதி அதிபர்)*
  திரு. ஆ. ஜெயபாலசிங்கம் *(செயலாளர், ப. மா. சங்கம்)*
  செல்வி. ம. கொலஸ்ரீனா *(பழைய மாணவி)*
  செல்வி. சீ. மகிந்தினி *(பழைய மாணவி)*
  செல்வன். ந. தவச்செல்வம் *(சிரேஷ்ட மாணவ தலைவர்)*
  செல்வி. சி. யாழினி *(மாணவ முதல்வர் சபை)*
* கௌரவிப்பு : அதிபர் திரு. ந. சிவகடாட்சம் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கல்.
* விருந்தினர் உரை
* பதிலுரை : அதிபர்
  திரு. சி. சிவலிங்கம் *(ஆசிரியர்கள் சார்பில்)*
  திரு. இ. கிருபராஜா *(கல்விசாரா ஊழியர்கள் சார்பில்)*
* நன்றியுரை : திரு. ஜோசப் தாவீது *(விழாச்சபை உபசெயலாளர்)*

**மாலை நிகழ்வு பிற்பகல் 4.00 மணி**

அமரர் E.K. சண்முகநாதன் அரங்கு

தலைமை : திரு. ந. சிவகடாட்சம் (அதிபர்)
பிரதமவிருந்தினர்கள் : திரு. சின்னையா சிவநேசன் *(கல்லூரி முன்னாள் அதிபர்)*
திரு. வீ. பொன்னம்பலம் *(தலைவர், பழைய மாணவர் சங்கம், கொழும்பு)*
சிறப்பு விருந்தினர்கள் : திரு. பொ. விக்னேஸ்வரலிங்கம் *(பழைய மாணவர்)*
திருமதி. தவபுத்திரி யேசுதாசன் *(பழைய மாணவி)*
திருமதி. ச. கனகரத்தினம் *(பழைய மாணவி, முன்னாள் பிரதி அதிபர்)*

**நிகழ்ச்சி நிரல்**

* மங்கல விளக்கேற்றல்
* இறைவணக்கம்
* மங்கள இசை, இருபாலையூர் நா. பாலசுப்பிரமணியம் குழுவினர்.
* வரவேற்புரை : திரு. ஜோசப் தாவீது *(உபசெயலாளர், விழாச்சபை)*
* ஆசியுரை : சிவஸ்ரீ. ம. மகாலிங்க சிவக்குருக்கள் *(செயலாளர், அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை)*
  அருட்திரு. ஜோன் மவுலிஸ் (இயக்குநர், மறைக்கல்வி நடுநிலையம்)
* வாழ்த்துரை : திரு. க. இ. குமாரசாமி *(பழைய மாணவர், சமூக சேவையாளர்)*
* தலைமையுரை
* கௌரவிப்பு நிகழ்வு
  * பழைய மாணவர் சங்கத்துக்கூடாக பாடசாலை வளர்ச்சிக்குஉதவியமைக்காக
    திருமதி. த. யேசுதாசன்
    திரு. எஸ். கே. தங்கவடிவேல்
    திரு. பொ. விக்னேஸ்வரலிங்கம்
  * விழாச்சபை செயற்பாடுகளில் வாழ்த்துப்பா ஆக்கம்
    திருமதி. ச. கனகரத்தினம்
  * நடன நிகழ்ச்சி ஒழுங்கமைப்பில்
    செல்வி தர்சினி தர்மகுலசிங்கம்
  * இருபாலையூர் தவில் மேதை, நா. பாலசுப்பிரமணியம் குழுவினர்.
    *ஆகியோரை கௌரவித்தலும் பாராட்டுதலும்.*
* விருந்தினர் உரை
* நன்றியுரை : திரு. எஸ். கே. தங்கவடிவேல் *(செயலாளர், விழாச்சபை)*
* கலை நிகழ்ச்சிகள்
  * இசையரங்கு
    திருமதி. குஞ்சலம்மா பசுபதீஸ்வரன் *(இசை ஆசிரியை, யாழ்/மங்கையர்க்கரசி வித்தியாலயம், நல்லூர்)*
  * நடன அரங்கு
    செல்வி தர்சினி தர்மகுலசிங்கம் *(நாட்டிய கலைமணி, யாழ். பல்கலைக்கழகம் அவர்களின் மாணவிகள் வழங்கும் நடனநிகழ்ச்சி)*
  * நாடகம் "அரிச்சந்திர மயான காண்டம்"
    யாழ். முன்னணி நடிகர்கள் வழங்கும் இசைநாடகம்.

**அணி செய் கலைஞர்கள்**

மங்கள இசை வழங்குவோர்:
இருபாலையூர் நா. பாலசுப்பிரமணியம் குழுவினர்.
நாதசுரம் : திரு. S.V. முருகையா, திரு. S. ரமேஸ். தவில் : திரு. நா. பாலசுப்பிரமணியம், திரு. மு. கண்ணன்

இசை நடன அரங்கில் அணிசெய் கலைஞர்கள்
மிருதங்கம் : திரு. க. சத்தியதாஸ் பாட்டு: திருமதி. ம. சுப்பிரமணியம், திருமதி. ம. சிவயோகநாதன்.
வயலின் : திரு. அ. ஜெயராமன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஒருங்கமைப்புக்குழு,
இணைச் செயலாளர்கள்,
திரு. எஸ். கே. தங்கவடிவேல்,
திரு. ஜோசப் தாவீது.

அமைப்புக் குழுவினர்,
150 ஆவது ஆண்டு விழாச் சபை.

**கல்லூரியை வாழ்த்துகின்றோம்**

1. பழைய மாணவர் சங்கமும் அதன் கொழும்பு, இலண்டன், கனடா கிளையினரும்.
2. பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
3. கல்லூரியின் மாணவர் மன்றங்கள்.

(சி-372)


# செச்னியாவில் தற்கொலை தாக்குதல்

(குரொஸ்னி)

ரஷ்ய ஆதரவு செச்னிய அரசாங்கத்தின் தலைமையகம் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலைத் தொடர்ந்து அங்கு இடிபாடுகளிடையே உயிரோடு எவரும் சிக்கியுள்ளனரா என்று மீட்புப் பணியாளர்கள் தேடுதல் நடத்தி வருகின்றனர்.

வெள்ளியன்று குரொஸ்னியில் அமைந்திருந்த அரச தலைமையகம் மீது வெடிபொருட்கள் ஏற்றப்பட்ட இரு வாகனங்கள் மோதியதில குறைந்தது 46 பேர் கொல்லப்பட்டனர். தாக்குதல் நடைபெற்ற இடம் இப்போது கற்குவியலாகவே கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செச்னியாவில் ரஷ்ய ஆதிக்கத்தை அகற்றுவதற்காகப் போராடி வரும் செச்னியப் போராளிகள் இத் தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளனர். ரஷ்யாவுக்கு எதிராக நடாத்தப்பட்ட மிகப்பெரிய தற்கொலைத் தாக்குதல் இது எனக்கூறப்படுகின்றது.

ஒரு லொறியிலும் ஜீப் வண்டியிலும் வெடி மருந்துகளை ஏற்றித் தடைகளை உடைத்துக்கொண்டு வந்த செச்னியப் போராளிகள், அந்த அரச கட்டட ஊழியர்கள் மதிய உணவை முடித்துக்கொண்டு திரும்பிக்கொண்டிருந்த போது - கட்டடத்தின் மீது தமது வாகனத்தை மோதி வெடிமருந்தை வெடிக்கச்செய்தனர். இதனால் கட்டடம் தகர்ந்து வீழ்ந்தது. இச்சம்பவத்தில் பிரதிப்பிரதமர் மற்றும் செச்னிய பாதுகாப்புக்குழுத் தலைவர் ஆகியோரும் காயமடைந்தனர்.


## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கணேசு தேவராசா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் காசோலை என்பன கடந்த 25.12.2002 அன்று முகமாலைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கணேசு தேவராசா, சுதுமலை வடக்கு, மானிப்பாய் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சி-375

**ராஜா** யாழ்ப்பாணம்.
எம். ஜி. ஆர்., ராதா சலூஜா நடித்த
**இதயக்கனி**
10.30, 2.30, 6.30
(சி-262)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
11.00, 2.45, 6.00 (பு.நே)
சரத்குமார், நெப்போலியன், தேவயானி நடித்த
**தென்காசிப்பட்டணம்**
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) மட்டும் JACKION நடித்த
**SHAFT**
(சி/287)


# செய்திப் படங்கள்









அமெரிக்க இராணுவத்தின் 10வது மலைப் படைப்பிரிவு ஈராக்கிற்கு எதிரான படை நடவடிக்கையின் முன், நியூயோர்க் பயிற்சி மையத்தில் தாக்குதல் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதை படங்களில் காணலாம்.


## யாழ்ப்பாண மாநகரசபை கேள்வி அறிவித்தல் 2003

கீழ்க்காணும் இடத்தில் உள்ள ஆட்டிறைச்சிக் கடையை 11.01.2003 முதல் 31.12.2003 வரையான காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி - 10.01.2003 வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிவரை
கேள்விப்படிவம் வழங்கும் இறுதித்திகதி - 09.01.2003 வியாழக்கிழமை பி.ப 3.00 மணிவரை
கேள்விகள் திறக்கும் திகதி - 10.01.2003 வெள்ளிக்கிழமை பி.ப 12.30 மணி

| இறைச்சிக்கடை அமையவுள்ள இடம | மீளளிக்கக்கூடிய பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வி (வற் நீங்கலாக) |
|---|---|---|
| ஜின்னா வீதி | 2500.00 | 15000.00 |

குறித்த இறைச்சிக்கடைக்கான இடத்தை கேள்விக்காரரே ஒழுங்கு செய்தல் வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறியலாம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2002.12.28

இ. இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம். சி-373

# தேசிய ஒருமைப்பாட்டினைப் பேணவே இராணுவம் நிபந்தனைகளை விதித்தது

## இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் பலகல்ல கூறுகிறார்

(கொழும்பு)

சமாதான முயற்சிகளுக்கு இராணுவம் ஆதரவு வழங்கும் அதே வேளை, நாட்டின் பிரதேச ஒருமைப்பாடு மற்றும் இறைமை என்பனவற்றைப் பாதுகாக்கும் கடமையில் இருந்து இராணுவம் ஒருபோதும் விலகாது என இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலய மீள்குடியமர்வு தொடர்பாக இராணுவத்தினரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைப் புலிகள் நிராகரித்துள்ளமை குறித்துக் கருத்து தெரிவிததபோதே இராணுவத்தளபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளுக்கு பூரணமான ஆதரவினை இராணுவம் வழங்கும் என்பதை - இராணுவத்தின் சகல பிரிவுகளின் சார்பிலும் நான் உறுதியளிக்கிறேன் எனத் தெரிவித்த பலகல்ல, குடாநாட்டுக்கான இராணுவத்தளபதி சமர்ப்பித்த திட்ட வரைபு, நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டையொட்டி சில முன்நிபந்தனைகளை கொண்டிருக்கின்றது.

இது அமைதி முயற்சிகளைப் பாதிக்கும் எனத் தான் கருதவில்லை என்றும், அரசாங்கத்துக்குத் தேசிய பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு என்பன குறித்து ஆலோசனை வழங்க வேண்டியது இராணுவத்தின் பொறுப்பு என்றும் லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல மேலும் தெரிவித்தார்.

## கல்வியியற்கல்லூரி ஊழியருக்குச் சீருடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் காவலாளர்களாக கடமை புரியும் ஊழியர்களுக்கு கடந்தவாரம முதல் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது.

நீலநிற நீளக்காற்சட்டையும், மென் நீலநிற சேட்டும் சீருடையாக வழங்கப் பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக தேசிய கல்வியியற் கல்லூரி இயங்கிவருகின்றபோதும், தற்பொழுதே ஊழியர்களுக்கு சீருடை வழங்கப் பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(83)

## ‘லக்மின’வின் உண்மையான ஆசிரியரைக் கண்டறிய முயற்சி!

(கொழும்பு)

ஜனாதிபதியைக் கொல்ல முயற்சித்தது தொடர்பாக செய்தி வெளியிட்ட ‘லக்மின’ பத்திரிகையின் ஆசிரியர் விசாரணைக்கு சமூகமளிக்கவில்லையென்று குற்றப்புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக, சம்பந்தப்பட்ட பத்திரிகையின் முகாமைப் பணிப்பாளரே ஆஜரானார் என விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

பத்திரிகையின் உண்மையான ஆசரியரைக் கண்டுபிடிப்பதற்குப் பொர்லிஸார் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கேட்டுக் கொண்டதற்கிணங்கவே, ஜனாதிபதி கொலைச் சதி சம்பந்தமாக பொாலிஸார் இவ் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

## கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகங்கள்

# கலைப்பீடம் தவிர்ந்த ஏனைய பீட விரிவுரைகள் மார்ச்சுக்கு முன் ஆரம்பம்

கொழும்பு மற்றும் பேராதனை ஆகிய பல்கலைக்கழகங்களில் கலைப்பீடம் தவிர்ந்த ஏனைய பீடங்களுக்கு புதிதாகத் தெரிவான மாணவர்களுக்கான விரிவுரைகள் அனைத்தும் மார்ச் மாதத்துக்குள் ஆரம்பிக்கப்பட்டுவிடும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள 12 பல்கலைக் கழகங்களுக்கும் தெரிவாகியுள்ள மாணவர்களுக்கான நியமனக் கடிதங்கள் இன்னும் பத்து நாட்களுக்குள் அனுப்பப்பட்டுவிடும் எனவும் தெரிவித்த பேராசியர் மெண்டிஸ்.

பேராதனை, கொழும்புப் பல்கலைக்கழகங்களில் கலைப்பீட விரிவுரைகளை உடனடியாக ஆரம்பிப்பதில் பல பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுவதால் அவற்றை ஆரம்பிப்பதற்கான கால எல்லை வகுக்கப்படவில்லை என்றும், ஏனைய பீடங்களின் விரிவுரைகள் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் ஆரம்பமாகும் எனவும் தெரிவித்தார்.

## வைகோ மீது நாளைக்குள் வழக்கு இல்லையேல் பிணையில் வருவார்!

(சென்னை)

‘பொடா’ சட்டத்தின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ, சிறையில் அடைக்கப்பட்டு 180 நாட்கள் பூர்த்தியடைவதால் அவர் மீது தமிழக கியூ பிரிவு பொலிஸார் வழக்குத்தாக்கல் செய்யலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

‘பொடா’ சட்டத்தின் கீழ் ஒருவரைக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாமல் ஆகக் கூடியது 180 நாட்களே சிறையில் அடைக்கலாம். வைகோ, நாளையுடன் 180 நாட்களைச் சிறையில் கழித்துள்ளதால், அவரை நாளை நீதிமன்றில் ஆஜர் செய்யும்போது பொலிஸார் அவர் மீதான வழக்கைத் தாக்கல் செய்வர் என நம்பப் படுகின்றது.

ஏற்கனவே, பொடா நீதிமன்ற நீதிபதி வைகோ மீது வழக்குத் தாக்கல் செய்யப்படாதமைக்கு கண்டனம் தெரிவித்திருந்தார். இதனால் நாளைய நீதிமன்ற அமர்வில் வைகோ மீதான வழக்குத் தாக்கல் செய்யப்படாவிட்டால் அவர் பிணையில் வெளிவரக்கூடிய சாத்தியங்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை

# படை அதிகாரிகள் - புலிகளின் தளபதிகள் சந்திக்க கண்காணிப்புக் குழு ஏற்பாடு!

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு நம்புவதாக குழுவின் பேச்சாளர் ரெய்டூர் ரொக்கில்சன் தெரிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலய மீள்குடியமர்வு குறித்து இராணுவத்தரப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட வரைபினைப் புலிகள் நிராகரித்திருந்தாலும், இந்த விடயத்தில் தீர்வினைக் காணமுடியும் என நாம் நம்புகிறோம். இதற்காக இராணுவ அதிகாரிகளையும் புலிகளின் தளபதிகளையும் சந்திக்க வைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அடுத்த சில நாட்களில் இச்சந்திப்புக் குறித்து இருதரப்புக்கும் அறிவிக்கப்படும். இச்சந்திப்பு பெரும்பாலும் ஜனவரி முதல் வாரத்துக்கு முன்னர் இடம்பெறும்.

இராணுவத்தினது திட்டவரைபைப் புலிகள் நிராகரித்தது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் தமக்கு அனுப்பப்படவில்லை எனத் தெரிவித்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர், இராணுவம் சமர்ப்பித்த திட்டவரைபு ஊடகங்களுக்குக் கசிந்ததால், புலிகளும் தமது நிராகரிப்பை ஊடகங்கள் மூலம வெளியிட்டிருக்கலாம் எனத் தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குவது குறித்தோ ஆயுதங்களைக் களைவது குறித்தோ யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு எந்தச் சிபார்சினையும் முன்வைக்காது. அத்துடன், இருதரப்புப் படைகளும் சமநிலையைப் பேணுவது குறித்து தாம் அக்கறையோடு இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 360 சமுர்த்தி அதிகாரிகள் பெப்ரவரியில் நியமனமாவர்!

(கொழும்பு)

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு எதிர்வரும் வருடத்தில் புதிய நியமனங்கள் வழங்க இருப்பதாக சமுர்த்தி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கான அனுமதியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளார். சமுர்த்தி முகாமையாளர் 60 பேரும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் 300 பேரும் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர்.

அடுத்த வருடம் பெப்ரவரி மாத மளவில் இந்நியமனங்கள் வழங்கப் படும் என்றும் அந்த சமுர்த்தி அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

(லி)

## திருமலை தமிழ் இலக்கிய விழாக் காட்சிகள்



திருமலையில் மாகாண கல்வி, பண்பாடு, விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்படும் தமிழ் இலக்கிய விழாவின் நேற்றைய ஆரம்ப நிகழ்வில் பேராளர்கள், விருந்தினர்கள் தமிழ் இன்னிய அணியினரால் வரவேற்று அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், கண்காட்சியை மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.தியாகலிங்கம் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும், கண்காட்சியில் சவர்க்காரத்தினால் செய்யப்பட்ட சிற்பங்களை அதிதிகள் பார்வையிடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.



விழாவில் கலந்துகொண்ட பேராளர்களின் ஒரு பகுதியினரையும் கலைநிகழ்ச்சிகளின் காட்சிகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: கௌதமன்)

# குடாநாடுபற்றி ஆய்வினைச் செய்ய வெளிநாட்டுக் குழுவினர் வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாடு சம்பந்தமான ஆய்வொன்றினை மேற் கொள்ள வென ஜேர்மன் மற்றும் அவுஸ்ரேலியா நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.



யாழ். வந்த ஆய்வுக்குழுவினர்

இவர்கள், யாழ்.குடாநாட்டின் பல இடங்களுக்கும் சென்று ஆய்வுகளைச் செய்துவருகின்றனர்.

நெடுந்தீவுக்குச் சென்ற இவர்களைக் கடற்படையினர் தமது வாகனத்தில் ஏற்றி அங்குள்ள இடங்களைக் காட்டினர். எனினும், நெடுந்தீவு மக்களுடன் உரையாட கடற்படையினர் அனுமதிக்கவில்லை என இவர்கள் கவலை தெரிவித்தனர்.

யாழ். கோட்டை மற்றும் ஏனைய பிரதேசங்களுக்கும் சென்றதுடன் யாழ்ப்பாணத்திலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிட்டு, இவை தொடர்பான வரலாறுகள் மற்றும் விபரங்களையும் அருகிலுள்ள மக்களிடம் கேட்டு அறிந்து கொண்டதுடன், புகைப்படங்களையும் எடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த மேற்படி பிரதிநிதிகளில், மருத்துவர் டிண்டி றொபட்சன் தலைமையில் மருத்துவர், பொறியியலாளர், சட்டத்தரணி ஆகியோர்கள் உள்ளடங்கியுள்ளனர்.

(க,லி)

# புன்னாலைக்கட்டுவனில் மீள்குடியமரத் தடை வசாவிளான் பாடசாலை மாணவர்கள் அச்சம்

(புன்னாலைக்கட்டுவன்)


புன்னாலைக்கட்டுவன் வடக்கு மக்களை மீளக் குடியமர அனுமதி மறுத்ததால், வசாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் அச்சமடைந்து காணப்படுகின்றனர்.

அடுத்த தவணை முதல் சொந்த இடத்தில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் இயங்க உள்ளது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும்போது அனுபவிக்கும் துன்பங்களைப்போல் தாமும் துன்பப்பட நேரிடுமோ என்று மாணவர்கள் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர்.

(83)





பளைப் பகுதியில் மனிதநேய கண்ணிவெடிகள் அகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்ட வெடி பொருட்களின் ஒரு தொகுதியைப் படங்களில் காணலாம். *(படங்கள் -கோகுலராகவன்)*

# விளையாட்டு உத்தியோகத்தர்கள் தென்பகுதியிலிருந்து யாழ். விஜயம்

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தில் இருந்து, யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த விளையாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்கள், வடமராட்சி கோட்ட அரசியல் பொறுப்பாளர் தயாவுடன் கோட்டச் செயலகத்தில் கலந்துரையாடினர்.

இவர்கள் இக்கலந்துரையாடலில், ஒரு சில அரசியல் கட்சிகளே சமாதானத்தை எதிர்க்கின்றனர் என்றும், தெற்கில் உள்ளோர் சமாதானத்தையே விரும்புகின்றனர் என்றும் தெரிவித்தனர். (116)

### வடமராட்சி கிழக்கு கோட்டக்கல்வி அலுவலகம்

வடமராட்சி கிழக்கு கோட்டக் கல்வி அலுவலகம் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் இயங்கவுள்ளது.

புலோலி மெதடிஸ்ட் மிஷன் தமிழ்க கலவன் பாடசாலை அதிபர் எஸ். ரகுநாதன் இக்கோட்டத்துக்கான உதவிக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (17)

### சமாதான நீதிவானாக நியமனம்

(அச்சுவேலி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றும் சி.கதிரைவேற்பிள்ளை அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். (76)

### குப்பிளானில் புகையிலைச் செய்கை

குப்பிளான் பகுதி விவசாயிகள் புகையிலைச் செய்கையில் ஆர்வம் காட்டுகின்றனர்.

இபபகுதி விவசாயிகள் அமைத்த புகையிலை நாற்று மேடை தொடர் மழையால் அழிவடைந்த நிலையில் வடமராட்சிப் பிரதேசத்திற்கு சென்று புகையிலை நாற்றுக்களை அவர்கள் கொள்வனவு செய்வதை அவதானிக்க முடிகின்றது.

# கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்கு புகுமுக நிகழ்ச்சித் திட்டம்

(சுன்னாகம்)

யாழ்ப்பாண தேசிய கல்வியற் கல்லூரி புதிய மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் - 2003 என்னும் பெயரிலான நிகழ்ச்சித் திட்டம், எதிர்வரும் இரண்டாம் திகதியில் இருந்து பதினொராம் திகதிவரை நடைபெறவுள்ளது.

யாழ்.கல்வியற் கல்லூரியில் மேற்படி நிகழ்வு நடைபெறவுள்ளது.

இக்காலப்பகுதியில் மட்டும் மாணவர்கள் வீட்டிலிருந்து வருகை தரமுடியும் எனப் பீடாதிபதி கமலநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் காலை 7.30 மணிக்கு முன்னதாக பதிவு செய்து கொள்ளுமாறும், பெற்றோரின் சம்மதக் கடிதத்தை ஒப்படைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (87)

# உயர்தொழில்நுட்ப நிறுவன அனுமதி தலைமையகத்திடம்

(யாழ்ப்பாணம்)

உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் புதிய கல்வி ஆண்டிற்கான அனுமதியினை அந்த நிறுவனத்தின் தலைமை அலுவலகமே மேற்கொள்ளவிருக்கிறது.

கடந்த காலத்தில் நிறுவனத்திற்கான புதிய அனுமதியினை யாழ்.உயர்கல்வி நிறுவனம் மேற்கொண்டுவந்தது.

அடுத்த ஆண்டு முதல் இந்த நடைமுறை நீக்கப்பட்டு புதிய மாணவர்களை தெரிவு செய்வதும் அதற்கான விண்ணப்பம் கோருவதையும் அந்த நிறுவனத்தின் தலைமை அலுவலகமே மேற்கொள்ளவுளளது.

புதிய ஆண்டிற்கான விண்ணப்பதாரிகளின் பட்டியல்கள் நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்திலிருந்து அனுப்பப்படும் பட்டியலின் அடிப்படையிலேயே, யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவனத்தினால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படும் எனத் தெரியவருகின்றது.

# கடற்தொழிலாளர் சங்கங்களுக்கு விரைவில் தலா 10 இலட்சம் கிடைக்கும்

யாழ.குடாநாட்டிலுள்ள அனைதது கடற்தொழிலாளர் சங்கங்களுக்கும், கடல் நீரியல்துறை அமைச்சிலிருந்து தலா 10 இலட்சம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்நிதி ஒவ்வொரு சங்கங்களும தமது எல்லைக்குள் அமைந்திருக்கும் இறங்குறையினைப் புனரமைக்கும் பொருட்டே வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னோடியாக ஒவ்வொரு கடற்தொழிலாளர் சங்கங்களிலிருந்தும் 11 பேர் அடங்கிய "இறங்துறை அபிவிருத்திச்சபை" அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(100)

# ஏ-9 பயணிகளுக்காக மலசல கூட வசதிகள்

(பளை)

கண்டி வீதியால் பயணம் செய்யும் பொதுமக்களின் நன்மை கருதி கரந்தாய் குளத்தடிச் சந்தியில் மலசல கூடங்கள் அமைக்கப்படுகினறன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் உதவியுடன் பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகத்தினர்- ஆண், பெண் இருபாலார்க்குமான மலசலகூடங்களை அமைத்து வருகின்றார்கள்.

(115)


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்.

HAPPY BIRTHDAY



பெயர் : தி.அலைமகள்

முகவரி: மிதுனாலயா, கொற்றாவத்தை.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------------------------------

முகவரி:----------------------------------------

பிறந்த ஆண்டு:----------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------

பெற்றார் ஒப்பம்




# தர்ஷாவின் பார்வையில்...

**த**மயந்தி தர்ஷா, பூசான் ஆசியப் போட்டிகளில் 400 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்றவர். ஆனால், இலங்கையின் சார்பில் 4x100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் ஓரங்கட்டப்பட்டவர். இதனாலும், இன்னும் பல காரணங்களாலும் இலங்கை அஞ்சல் ஓட்டப் போட்டியில் பெற்றிருக்கக்கூடிய ஒரு தங்கப்பதக்கம் இழக்கப்பட்டது. இதற்குக் காரணம் விளையாட்டுத்துறை அதிகாரிகளே என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது. தற்போது 100 மீற்றர் அஞ்சலோட்டக் குழுவில் இருந்து, தான் விலகிக் கொள்வதாக தர்ஷா அறிவித்துள்ளார். சிறியாணி குலவன்ஸ, பிரதீபா ஹேரத் இருவரும் குறுந்தூர அஞ்சல் ஓட்டத்தில் இருந்து ஒதுங்கிக்கொள்ள, தற்போது தர்ஷா வெடிகுண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார். இந்தத் தளம்பல் நிலை மற்றும் வீராங்கனைகளின் வெளியேற்றத்துக்கு தேசியப் பயிற்றுநர், தெரிவாளர்கள், இலங்கை AAA ஆகியோர் பொறுப்பேற்க வேண்டும். இவர்களின் பிழையான அணுகுமுறைகளே இந்த வீழ்ச்சிக்குக் காரணம் என்கின்றனர் விடயமறிந்தோர். இந்த இடைவெளியை நிரப்புவது மிகக் கடினமென்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. இன்னொரு புறத்தில் - சரியான தகுதியான வீர, வீராங்கனைகள்கூடப் புறக்கணிக்கப்பட்டுத் தகுதி குறைந்தவர்கள் (தர்ஷா அல்ல) செல்வாக்கின்பேரில் உள்வாங்கப்பட்ட சம்பவங்களும் இப்போது சுட்டிக் காட்டப்படுகின்றன.



இது இவ்வாறிருக்க, தேசிய மட்டப் பயிற்றுநர்களை நியமிப்பதில் விளையாட்டுத் துறை அமைச்சு நேரடியாகப் பொறுப்பேற்பது என்ற முடிவு, பலராலும் வெகுவான வரவேற்பைப் பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது. இந்தவகையான நியமன முறைகள் எல்லாவகைத் தடகள விளையாட்டு அமைப்புகளுக்கும் பொருத்தமானதாக இருக்க வேண்டும் என்றும் கருத்துக் கூறப்படுகின்றது. தற்போதைய தேசியப் பயிற்றுநர் கூட, முன்னைய நடைமுறையின் ஊடு நியமிக்கப்பட்டவர் என்றும், அவரும்கூட புதிய நியமன முறையின் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் விமர்சகர்கள் ஏ்டுத்துக்காட்டுகிறார்கள். இப்படியாகத் தென்னிலங்கையில் இருந்துவரும் செய்திகளைப் பார்க்கும்போது அதிகாரப் பலம், செல்வாக்கு, அரசியல், தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் போன்ற பல காரணங்கள் பல திறமைசாலிகளை முளையிலேயே கிள்ளி எறிந்திருக்கின்றன என்று ஊகிக்க முடிகின்றது. அதேபோல தேசிய மட்டத்தில் இனங்காணப்பட்டவர்களும்கூட



பல அழுத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் உணர முடிகின்றது. இதற்கு தர்ஷா, சுசந்திகா ஆகியோரும் விதிவிலக்கல்ல என்பதற்கான சம்பவங்கள் இன்னமும் அவ்வளவு பழையவை ஆகிவிடவில்லை.

தர்ஷா, தான் சார்ந்த துறைபற்றிக் கூறும்போது - அமைதியான மனநிலை, அடிக்கட்டுமான அமைப்பின் பூரணத்துவம், உறுதிப்பாடு ஆகியவை விளையாட்டு வீரர்களுக்கு அவசியம் என்கிறார். மேலும் ஒருபடி மேலே சென்று வியைாட்டுத்துறைச் சர்வகலாசாலையொன்று இலங்கையில் அமைக்கப்பட வேண்டும் என ஆலோசனை கூறுகின்றார்.

விளையாட்டுத்துறையானது ஒரு விஞ்ஞானச் செயல்முறை என்று உறுதியாக நம்பும் தர்ஷா, செயல்முறைப் பயிற்சிகளுடன், பல்கலைக்கழக வகுப்பறைக் கற்பித்தலும் (THEORETICAL) மிக அவசியம் என்கிறார், அழுத்தம் திருத்தமாக. ஐரோப்பாவின் அடிக்கட்டுமான அம்சங்கள் சரியாக அமைகின்றன. அடுத்து வீரர்களின் எதிர்காலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. இதுவே ஐரோப்பிய தடகள வெளிப்பாடுகள் உயர்நிலையில் இருக்கக் காரணமென்று ஆதாரம் சேர்க்கின்றார் தர்ஷா. சர்வகலாசாலை அமைப்பின் ஊடாக விளையாட்டுத்துறை சார்ந்த பட்டம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும்போது, ஒரு கௌரவம் மற்றும் எதிர்காலத்தை மிக நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் தைரியம் என்பன ஏற்படும் என்பவர், தான் இதனைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தெரிவித்துள்ளதாகவும் கூறுகின்றார். இந்தளவு தூரம் உறுதியாக தர்ஷா கூறும் கருத்துக்கள் நிச்சயம் கருத்தில் எடுக்கப்படவேண்டியவையேயாகும்.


தென்னிலங்கைத் தடகள வீரர்கள் அனுபவிக்கும் வசதிகள், வாய்ப்புக்கள் இங்கில்லை என்று நாம் குறைபட்டுக்கொண்டிருக்கும்போது, அங்குள்ள நிலைமைகளைத் தர்ஷா அலசுகிறார்.

சரியான நிறுவன அமைப்பே இளம் தலைமுறையினரைத் தடகளத்துறைக்கு ஈர்க்கும் என்று உறுதிபடக் கூறும் இவர், தற்போது நிகழ்வுகள் சரியான திசையில் செல்வதாகத் தெரியவில்லை என்கிறார். நாங்கள் புறக்கணிக்கப்பட்டோம், எமது பிரச்சினைகளைப் பற்றி யாரும் பெரிதாகக் கவலைப்படவில்லை. இப்படியே போனால் எமக்கு அடுத்ததாக வரப்போகும் வீரர்களைப் பெற்றுக் கொள்வது கடினமாகவே இருக்கும். இன்றுகூட 400 மீற்றர் ஓட்டத்தில் எனக்கடுத்ததாக ஒருவரை உயர்தரத்தில் இனங்காண இயலவில்லை என்கிறார்.


**~ நிர்மலன்.**

தர்ஷாவின் மன எழுச்சிகள், எண்ணங்கள் எத்தனையோ பேருடைய எண்ணங்களைப் பிரதிபலித்து நிற்பதாகக் கொள்ளலாம். பதவிகள், பட்டங்கள், நிறுவன அங்கத்துவங்கள் தாம் சார்ந்த துறையை வளர்ப்பதற்காக இருக்க வேண்டுமேயன்றி, தம்மைப் பிரபல்யப்படுத்தவும், வசதி வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளுவதற்குமாக இருக்கக்கூடாது. இத்தகைய போக்குகள் அவர்களின் தற்காலிக பிரபல்யத்துக்கு உதவியாக இருக்கலாம். ஆனால், நீண்ட காலப் போக்கில் யாரோ எவரோ என்று தெரியாத ஒரு நிலையே உருவாகும் என்று தர்ஷா மறைமுகமாகக் கூறுகின்றார் என்று கொள்ளலாமா? ⁎

# விதியை மாற்றும் விதிகள்



ஷேன் வோண்

**மி**கவிரைவில் நடைபெறவிருக்கும் உலகக் கிண்ணப் போட்டிகளைக் கிரிக்கெட் ரசிகர்கள் மிக ஆவலாக எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் நேரம் இது. அதிலும் உலகின் தலைசிறந்த கிரிக்கெட் வீரர்களைக் களத்தில் கண்டுகளிக்க ஆவல் கொண்டுள்ளவேளை இது. இவ்வேளையில் ICC யின் சில விதிமுறைகள் அணிகளை ஏதோ ஒருவிதத்தில் தம் சுய நடைமுறையில் இருந்து தடுத்துவிடுமோ என்ற அச்சம் உருவாகியிருக்கிறது. ICC யின் விதிகளின்படி முதலில் முப்பது கிரிக்கெட் வீரர்களின் பெயர்களை ஒவ்வொரு நாடும் ICCயிடம் சமர்ப்பிக்க வேண்டும். இதன்பின் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன், இறுதியில் பதினைந்து வீரர்களின் பெயர்களை அந்த முப்பது பேரில் இருந்து தெரிந்து அறிவிக்கவேண்டும். இவர்களே உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெற்றவர்கள் ஆவார்கள். இந்த விடயமே இப்போது சர்ச்சைக்குள்ளாகி இருக்கின்றது. பலராலும் கண்டிக்கப்படுகின்றது.



உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற இன்னும் ஒரு மாதத்துக்கு மேல் காலம் இருக்கிறது. இந் நிலையில் பிறைன் லாரா, ஷேன் வோண், முரளிதரன் மேலும் இங்கிலாந்து அணியின் முன்னணி வீரர்கள் பலர் காயப்பட்ட நிலையில் இறுதி அணிக்கு இவர்களைத் தெரிவு செய் வதா இல்லையா என்ற ஒரு நிலை அணிகளுக்குக் காணப்படுகின்றது. இப்படியான ஒரு நிலையில் அணி கள் தடுமாறிக் கொண்டிருக்கும் வேளையில், முதல் முப்பது பேரில் அடங்காத சிலர் அணிக்குள் உள் வாங்கப்படுவதால் அணி கூடிய பலம் பெறும் ஒரு நிலை காணப்படுகையில் இவர்களைச் சேர்க்க முடியாதென்றும் சட்டம் தடைவிதிக் குமாயின் - சில வீரர்களுக்கும், அதேவேளை அணிகளுக்கும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் நிலை காணப்படுகின்றது. தற்போது இலங்கை அணியில் இந்த ஆபத்தை எதிர்நோக்குபவர் றொமேஸ் களுவிதாரண. ஏனெனில் இவர் சில வேளைகளில் உலகக்கிண்ணப் போட்டிகளுக்குத் தெரிவாகும் வாய்ப்புண்டு. இன்னொருவர் ஸ்ரீவ் வோ. இவர் மீண்டும் இறுதி நேரத்தில் உலகக் கிண்ண அணிக்குள் இடம்பெறும் வாய்ப்பு உண்டு என்ற பரவலான கருத்து வலுப்பெற்றுவருகின்றது. மேலும் ICC விதித்த காலக்கெடுவிற்குள் இந்தியா போன்ற ஒரு சில நாடுகள் இன்னமும் அணித் தெரிவைக் கொடுக்கவில்லை. எனவே இந்தியாவிற்கு இறுதிநேரத்தில் தான் விரும்பும் அணி வீரர்களை உள்வாங்கும் சந்தர்ப்பம் கூடுதலாகக் கிடைக்கின்றது என்பது வெளிப்படை. இதேவேளை ஏற்கனவே பெயர் கொடுத்தவர்கள் பாதிக்கப்படும் சந்தர்ப்பமும் உண்டு.

**- கண்ணா.**


லாரா

நேரகாலத்திற்கே அணி வீரர்களின் விபரங்கள் தேவைப்படுவதற்கு ICC ஆற்ற வேண்டிய ஆவணங்கள் சார்ந்த வேலைகள் - வீரர்களின் விபரங்கள் மற்றும் புத்தகங்கள் அச்சிடல் - ஒரு காரணம் என்பது வெகுவாகக் கண்டிக்கப்படுகிறது. ஏனெனில் இரண்டு மாதத்துக்கு முன்பே இக்காரணத்துக்காக பெயர் விபரம் கேட்டபோது வெறும் உப்புச்சப்பற்ற நடைமுறை என்பதை கிரிக்கெட் ரசிகர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

அப்படித்தான் ஒருவர் உள்வாங்கப்படுதல் அவசியம்தான் என்று அணி கருதுமாயின், தவிர்க்க முடியாத அந்தச் சந்தர்ப்பத்தில் எவ்வகையில் ஒருவர் மாற்றப்படலாம் என்பதையும் ICC குறிப்பிடுகின்றது. அதாவது ஒரு தகைமை கொண்ட இன்னொருவர் (LIKE FOR LIKE), உதாரணமாக - ஒரு வேகப் பந்து வீச்சாளர் காயப்பட்டால் இன்னொரு வேகப்பந்து வீச்சாளர்தான் உள்வாங்கப்பட வேண்டும். இதுவும் பல பரிசீலனைகளின் பின்பே சாத்தியமாகும் என்றும் அறியப்படுகின்றது. இந்தவகையில் பார்க்கும்போது "முப்பதுக்கு" அப்பால் குறுகிய காலத்தில் திறமையைக் காட்டும் அனுபவம் வாய்ந்த கிரிக்கெட் வீரர்கள் சிலர் சந்தர்ப்பத்தை இழக்கப்போவது தெளிவு.



Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# இந்திய வீரர்களின் முதல் ரசிகன்



முஷாரப்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி மற்றும் சர்வதேச ஆட்டங்கள் தொடர்பாக ICC உயர் அதிகாரிகள் பல்வேறு நாடுகளுக்கும் விஜயங்கள் மேற்கொண்டு நிலைமைகளை அவதானித்து வருகிறார்கள். இருந்தும் ICCஇன் தலைவர் மல்கம் கிரேயின் அண்மைய பாகிஸ்தான் விஜயம் இன்னொரு வகையிலும் முக்கியத்துவம் பெறுகிறது. காரணம் - அண்மைக்காலத்தில் சர்வதேசக் கிரிக்கெட் அணிகள் பாகிஸ்தான் மண்ணில் சென்று விளையாட மறுப்புத் தெரிவித்து வருவதேயாகும். அண்மையில்கூட அவுஸ்திரேலிய அணி இலங்கையில் ஒரு போட்டியும் சார்ஜாவில் இரண்டு போட்டிகளுமாக தன் பாகிஸ்தானுக்கான டெஸ்ட் தொடரை முடித்துக் கொண்டதை ரசிகர்கள் அறிவார்கள்.

இந்நிலையில்தான் ICC தலைவர், நாட்டின் ஜனாதிபதியான பெர்வேஸ் முஷாரப் அவர்களுடனும் புதிய ICC தலைவராகப் போகும் ஈஷாண் மாணி மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத்தலைவர் லெப். ஜெனரல் டாக் கூர்சியா ஆகியோருடன் கலந்துரையாடியிருக்கிறார். இதன் பின் கருத்துத் தெரிவித்த அவர், பாகிஸ்தானில் பாதுகாப்பு நிலைமை பற்றி திருப்தி தெரிவித்துள்ளதுடன், ICC உறுப்பு நாடுகளைப் பாகிஸ்தானில் கிரிக்கெட் விளையாட ஊக்கப்படுத்தப் போவதாகவும் கூறியுள்ளார்.




இதற்குக்காரணமாக அமைந்தது காஷ்மீர்ப் பிரச்சினையாகும். இந்திய கிரிக்கெட் சபை பாகிஸ்தான் சுற்றுப்பயணம் நடைபெறும் என்று கூறுவதும் பின்னர் அரசியல்வாதிகள் அதைத் தடை செய்வதும, சிலவேளைகளில் அரசியல்வாதிகள் கிரிக்கெட் அணியை அனுப்பினால் என்ன என்று யோசிப்பதும், பின்னர் கைவிடப்படுவதுமாக இந்திய அணியின் பாகிஸதான் விஜயங்கள் தட்டுப்பட்டுப் போய்க் கொண்டே இருக்கின்றன.

இந்நிலையில் ஜெனரல் முஷாரப் ICC தலைவரிடம் கருத்துத் தெரிவிக்கும்போது, பாகிஸ்தான் ஜனாதிபதி கருத்துக் கூறும்போது, எந்தவொரு சர்வதேச அணியும் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யின் அவர்களுக்கான முழுப் பாதுகாப்புத் தொடர்பான உத்தரவாதங்களையும் நான் அளிக்கின்றேன். ஆனால் எனது உத்தரவாதம் சரியான முறையில் எடுத்துக்கொள்ளப் படவில்லை என்பது எனக்கு ஏமாற்றமாக இருக்கின்றது என்றார். இந்த வகையில் எதிர்வரும் முக்கியமானதொரு சுற்றுப்பயணம் பற்றியும் கலந்துரையாடியிருக்கிறார்கள். அடுத்தவருடம் இந்தியா மூன்று டெஸட் போட்டிகள் மற்றும் ஒருநாள் போட்டிகளில் கலந்துகொள்ள பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொள்ளவேண்டும். சிலகாலமாகவே இந்தியக் கிரிகெட் அணி பாகிஸ்தானுக்கான சுற்றுப்பயணங்களை மேற்கொள்வதில்லை. இந்திய அணி பாகிஸ்தான் வந்து எங்கள் கிரிக்கெட் ரசிகர்களுக்கு கிரிக்கெட் ஆட்டங்களின் ரசிப்புக்கு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். நான் அரசியலையும், விளையாட்டையும் வேறுவேறாகப் பார்க்கின்றேன். இதற்கும் மேலாக நான் சில இந்திய கிரிக்கெட் வீரர்களின் ரசிகனும்கூட. எனினும, இந்திய அணி முதலில் பாகிஸ்தான் வரவேண்டும். அதாவது இந்திய கிரிக்கெட் சபை தனது சர்வதேசக் கடப்பாட்டை கௌரவிக்க வேண்டும். அதன்பின் பாகிஸ்தான் அணி இந்தியா செல்லும் என்பவர், எமது இரு நாடுகளுக்கிடையிலான போட்டிகள் மூன்றாம் நாடு ஒன்றில் நடைபெறுவதை நான் விரும்பவில்லை. 2003ல் இந்திய அணி பாகிஸ்தான் வரும் என்று நான் நம்புகின்றேன் என்கிறார். இவ்வகையில் 2004ல் பாகிஸ்தான் இந்தியாவிற்குச் செல்ல வேண்டும். அதேவேளை மல்கம் கிரே கருத்துக் கூறும்போது, இந்தியக் கிரிக்கெட் சபை பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் அணியை அனுப்ப விருப்பமாகவே உள்ளதென்று கூறியுள்ளார்.



ஆனால், இந்த நம்பிக்கையெல்லாம் தவிடு பொடியாகும்படியான செய்திகள் தொடர்ந்து வருகின்றன. முஷாரப்பின் அழைப்பை இந்தியா நிராகரித்தது விட்டதாகச் செய்திகள் வருகின்றன. எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் தூண்டி விட்டுக் கொண்டிருக்கும்போது நாம் எப்படி எமது கிரிக்கெட் அணியை பாகிஸ்தானுக்கு அனுப்ப முடியும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் விக்ரம் வர்மா ஆக்ரோஷமாகக் கேட்கிறார். இந்நிலையில் எப்படியாவது இந்திய - பாகிஸ்தான் அணிகளைச் சந்திக்க வைத்து விட வேண்டும் என்ற ஆவலில் ICC தலைவர் மூன்றாவது நாடொன்றிலாவது டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளை நடாத்த வேண்டும் என்று விருப்பப்படுகின்றார். அரசியலும் விளையாட்டும் ஒன்றாகக் கலந்து விட்டது பற்றி அவர் மேலும் கவலைப்படுகின்றார். ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டுகின்றார் மல்கம் கிரே. தற்போது இந்தியாவில் நடைபெறும் பார்வை இழந்தோர் உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் பாகிஸ்தான் விளையாடுவதைக் குறிப்பிடுகின்றார். எனவே, இந்திய மண்ணில் பாகிஸ்தான் விளையாட்டுப் பிணைப்பு அறுந்து விடவில்லை என்கிறார். உண்மையும் அதுதான். விரைவில் இருநாடுகளும் பரஸ்பரம் தத்தமது நாடுகளில் சந்தித்து, அற்புதமான போட்டிகள் மூலம் கிரிக்கெட் ரசிகர்களை மகிழ்விப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

- சரண்யன் -

# மாறிய புயல் மையம்

சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் உலகின் அதிவேக வீரர் மொறிஸ் கிரீன், அதிவேக வீராங்கனை மரியன் ஜோன்ஸ். இந்தப் பெயரை இவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தது இவர்கள் பெற்ற 100 மீற்றர் குறுந்தூர ஓட்டத் தங்கப் பதக்கங்கள். பொதுவாக 100 மீற்றர் ஆண், பெண் நிகழ்வுகளும் அதில் வெற்றி பெற்றவர்களும் மற்றெந்த நிகழ்வுகளிலும் வெற்றி பெற்றவர்களைவிட ரசிகர்களால் பெரிதும் அறியப்பட்டவர்களாக இருப்பார்கள். இப்பொழுது எதிர்வரும் கிரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் 100 மீற்றர் குறுந்தூர வெற்றி வீரன் யாராக இருக்கும்? என்ற புதிய வினாவொன்று எழுந்துள்ளது. இந்த வினா பாரிஸ் கிறோண் பிரி (GRAND PRIX) செப்டெம்பர் பதினாலின் இறுதிக் கட்டத்தை அடைந்தபோது ஏற்பட்டது. பாரிஸ் கிறோண் பிரியின் ஆண்கள் பிரிவின் நாயகனாக மொரோக்கோ நாட்டின் ஹிக்கம் எல் கோர்றோ மற்றும் பெண்கள் நிகழ்வின் நாயகியாக மரியன் ஜோண்ஸ் இருவரும் தீர்மானிக்கப்பட்டிருந்தவேளை அது. அவ்வேளையில்தான் ரிம் மொண்ட்கொமரி தனது 100 மீற்றர் ஓட்டத்தை ஆரம்பித்தார். அடுத்த 9.78 செக்கன்களில் எவருமே எதிர்பார்க்காத வகையில் மொண்ட்கொமரி, மொறோக்கோ வீரரைப் பின்தள்ளி அதிகூடிய புள்ளிகளின் அடிப்படையில் பாரிஸ் கிறோண் பிரியின் நாயகனாகின்றார். அந்த 9.78 செக்கன்கள் என்பது மொறிஸ் கிரினின் சாதனை நேரமான 9.79 (1999) செக்கன்களுக்கும் குறைவான சாதனை நேரமாக அமைந்ததே இதற்குக் காரணம். எனவே உலக சாதனை நேரம் தற்போது ரிம்மொண்ட்கொமரியின் கைகளில். அதோடு மரியன் ஜோண்சும் அவரது கைகளில்தான். (மரியன் ஜோண்ஸ் தனது புதிய நண்பனாகத் தெரிந்தெடுத்திருப்பதும் வாழ்வதும் ரிம் மொண்ட்கொமரியுடன் என்பது, சிட்னி ஒலிம்பிக்ஸ் போட்டிகளுக்குப் பிந்திய செய்தி) சில நிமிடங்களுக்கு முன் மரியன் ஜோண்ஸ் 100 மீற்றர் ஓடிய அதேதடத்தில்தான் ரிம் மொண்ட்கொமரியும் ஓடிச் சாதனை படைத்திருக்கிறார். இது குலுக்கல் முறையில் வந்திருந்தாலும், மனமொத்த இருவருக்கும் நற்சகுனமாக அமைந்ததாக மொண்ட்கொமரி எண்ணி இருக்க வேண்டும். இதனால், அவர் பெரும் மனமகிழ்ச்சிக்குள்ளாகி இருந்தார். "எனது பயிற்றுநர் என்னை ஆரத்தழுவிப் பாராட்டும் வரை நான் உலக சாதனை நேரத்தை முறியடித்துவிட்டேன் என்று அறிந்திருக்கவில்லை" என்கிறார் அவர். இருந்தும் மொறிஸ்கிரின் இந்த நிகழ்வில் ரிம் மொண்ட்கொமரியுடன் போட்டியிடவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் சாதனை முறியடிப்புப் பற்றிக் கருத்துக்கூறும்போது, தானும் ஓடியிருந்தாலும்கூட முடிவு எவ்வாறு இருந்திருக்கும் என்று கூற, முடியாதுதான் இருந்திருக்கும் என்கிறார் மொறிஸ்கிரீன் அடக்கமாக. ரிம் மொண்ட்கொமரி இதற்கு முன் இரண்டு முறை மொறிஸ் கிரீனை 100 மீற்றர் ஓட்டத்தில் வென்றிருக்கிறார் என்பதையும் குறிப்பிடவேண்டும்.

இதேவேளை, இந்த நிகழ்வில் இரண்டாவதாக வந்த ஐரோப்பியச் சம்பியன் ட்வெயின் சேம்பர்ஸ் திறமையானதொரு 100 மீற்றர் ஓட்ட வீரர். இவர் பிரித்தானியாவின் லின்போட் கிறிஸ்டியின் 9.87 செக்கன்களைச் சமப்படுத்தியவர். ஆனால், மொண்ட்கொமரியை நெருங்க முடியாமல் இருக்கின்றார். எனினும் சேம்பர்சும் கிரீனைத் தோற்கடித்தவர்தான். நேரச் சாதனை என்ற வகையில் 1988 சியோல் ஒலிமபிக் போட்டிகளில் கனடாவின் பென் ஜோண்ஸன் 100 மீற்றரை 9.79 செக்கனில் ஓடியதும், ஊக்க மருந்து பாவித்த நிரூபணத்தின் பேரில் சில மணி நேரத்திலேயே அவரது தங்கம் பறிக்கப்பட்டதும் இன்னொரு பக்கம். அதன்பின் இப்போதுதான் அதைவிடக் குறைந்த நேரத்தில் 100 மீற்றர் ஓடப்பட்டிருக்கிறது.

தே.செந்தூரன்




மரியன் ஜோண்ஸ்

இவர்களெல்லாம் தற்போது எதிர்நோக்கிக் கொண்டிருப்பது 2003 உலகத் தடகள சாம்பியன்சிப் போட்டிகள் மற்றும் 2004 இல் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகள். மொறிஸ் கிரீனை அவரது உச்சமான பயிற்சி நிலையில் சந்திக்க நான் விரும்புகிறேன் என்கிறார் மொண்ட்கொமரி. கடந்த ஐந்து வருடங்களாக உலகின் 100 மீற்றர் ஓட்டத்தில் முடிசூடா மன்னனாக விளங்கி வரும் மொறிஸ் கிரினுக்குச் சவால்கள் அதிகம்தான்.

மொண்டகொமரி இறுதியாகக் கருத்துக் கூறும்போது, மொரிஸ் கிரீனின் தரத்தில் நான் வரவேண்டும் என்று கூறுகிறார். அதாவது உலக சாதனை நேரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டும். அதுவும் குறைந்தது இரண்டு ஒலிம்பிக் போட்டிகளிலாவது உலகின் வேகமான மனிதன் என்ற பெயரைப் பெற வேண்டும். இவை எல்லாம் நடைபெறுமா இல்லையா என்பது 2003 உலகச் சம்பியன்சிப் மற்றும் 2004 ஒலிம்பிக் போட்டிகளில் தெளிவாகத் தெரிந்துவிடும்.





மொண்ட்கொமரி

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.
- திருக்குறள்

## நமது நோக்கு

# விழிப்பாயிருப்போம்!

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டம் - ஆயிரக்கணக்கான போராளிகளின் தியாகத்துடனும், மக்களின் அர்ப்பணிப்புடனும் முன்னெடுக்கப்பட்டு - இன்று மிகப் பெரும் கௌரவத்துடனும், பலத்துடனும் - தமிழர்களது உரிமைகளை சர்வதேச அங்கீகாரத்துடன் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலைக்குச் சென்றிருக்கிறது.

இந்த உயர்நிலையை எட்டிக் கொள்வதற்கு கடந்து வந்த பாதைகள் - விடுதலைப் போராட்டம் சந்தித்த வெற்றிகள் மற்றும் இழப்புக்கள் என்பன - இப்போராட்டத்தின் பெறுமதியை உணர்த்தி நிற்கின்றன.

இந்த நிலையில் - எமது வாழ்வையும், சுதந்திரத்தையும், எமக்கான ஆட்சியதிகாரத்தையும் தீர்மானித்துக்கொள்ளும் உரிமை எமது மக்களுக்கேயுண்டு என்பதை விடுதலைப் போராட்டம் உலகெங்கும் உரத்துச் சொல்லியிருக்கிறது.

சமாதானத்துக்கான நகர்வுகளின் போதும் - இந்தத் தளத்தில் நின்றே விடுதலைப் புலிகள் தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக - தமிழ் மக்களின் ஆட்சியதிகார உரிமையைக் கோரி நிற்கின்றனர்.

இவ்வாறானதொரு பேரம்பேசும் வல்லமையைக் கொண்டுள்ள தமிழர் தரப்பினரது நியாயப்பாட்டையும் அவர்களுக்குள்ள உரிமைகளையும் சர்வதேசமும் வலியுறுத்தத் தொடங்கியுள்ளபோது -

இந்த நிலையில் -

எமது தாயகத்தின் அருகேயுள்ள பிராந்திய வல்லரசான இந்தியாவின் செயற்பாடுகளோ தமிழர்களிடம் சந்தேகங்களை ஏற்படுத்துவனவாக அமைகின்றன.

அண்மையில் நடந்தேறிய, இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் கன்வால் சிபாலின் விஜயமும்- அதனைத் தொடர்ந்த இந்தியாவின் படையியல் ரீதியான சில நகர்வுகளும் - தென்னாசியப் பிராந்தியத்தில் மேலாதிக்கம் செலுத்த நினைக்கும் பிராந்திய வல்லரசு என்ற நிலையோடு, ஈழத்தமிழர் விவகாரத்தில் நேரடியாக இருக்காவிட்டாலும், மறைமுகமான ரீதியில் இந்தியா தலையீட்டினை மேற்கொள்வதை உறுதிப்படுத்தி வருகின்றன.

சமாதானத்தின் செல்போக்கும், அதன் முன்னேற்றமும், அமைதியை மீண்டும் ஏற்படுத்துவதற்கான சர்வதேசத்தின் அக்கறையும் - தென்னிலங்கை இனவாதிகளிடையே ஏற்படுத்திய எரிச்சலூட்டும் தன்மையை ஒத்ததாகவே, அதற்கு எவ்விதத்திலும் குறையாத அளவிலேயே இந்தியாவின் வெளிப்படுத்துகையும் ஆரம்பமாகியிருக்கிறது.

குறிப்பாக - இராணுவ நலன் சார்ந்த விடயங்கள் பறறிய இறுக்கமான சூழல் ஏற்பட்டிருக்கும் இத்தருணத்தில், இந்தியாவின் வெளியுறவுச் செயலர் கன்வால் சிபால், இலங்கைக் கடற்படைத் தளபதியை புதுடெல்கிக்கு அழைத்து - சர்வதேசக் கடற்பரப்புக் கண்காணிப்புப் பற்றியும், இலங்கையின் கடற்பகுதியில் கப்பல்களின் நடமாட்டம் தொடர்பாகவும் பேசுவதென்பது - தென்னாசியாவின் பிராந்திய வல்லரசு என்ற கோதாவுடன், வலுமிக்க விடுதலைப் புலிகளின் கடற்புலிகளது செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதிலும் ஆர்வம் கொண்ட நோக்கே என்பது கவனிக்கத்தக்கதாகின்றது.

போர் ஓய்ந்து கடந்த ஒரு வருட காலமாகத் தணிந்திருந்த, இந்தியாவின் இந்த ஆர்வம் - தற்போது வேகங்கொள்வதென்பது சாதாரண விடயமாக எடுத்துக்கொள்ளப்பட முடியாததாகும்.

அரசியல் ரீதியாகவும், அதேவேளை படையியல் ரீதியாகவும் - இலங்கை விவகாரத்தில் இந்தியா தலைகாட்ட வெளிப்படுவதென்பது - ஈழத்தமிழர் விவகாரத்தில் இன்னமும் இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்கும் கொள்கை வகுப்பாளர்கள் சிலர் புதுடெல்கியின் 'சௌத் புளொக்'கில் ஆதிக்கம் செலுத்துவதையும்,

விடுதலைப் புலிகளின் பலம் மேலோங்குவதையோ, ஈழத்தமிழர் பேரம்பேசும் வலு அதனால் உறுதியாவதையோ சகித்துக் கொள்ள முடியாத - 'பார்ப்பனீயச் சிந்தனை' இன்னமும் அங்கு அகன்று போகாமலிருப்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

இந்த வகையில் - சமாதானத்தையும், அதன் வழியே தமிழர்கள் உரிமை பெற்று வாழ்வதையும் ஏற்றுக்கொள்ள முடியாதவர்களாகியிருக்கும் தெற்கு அரசியல் சக்திகளின் துணையுடன் நடைபெறும் , இந்தியாவின் இத் முயற்சிகளும், கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் ஆழமாக நோக்கப்படவேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது.

சமாதானத்தை முழுமனதுடன், ஆர்வமுடன் வரவேற்கும் அதேவேளை - இத்தகைய நகர்வுகள் குறித்தும் தமிழர்கள் சிரத்தையும், கவனமும் கொண்டிருப்பது காலத்தின் அவசியுமாகின்றது.

# அஷ்ரப் பயணித்த ஹெலி விபத்து

# விமானப்படை மீது வழக்குத் தாக்கல்!

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகரான அஷ்ரப் பயணம் செய்த ஹெலி விபத்துக்குள்ளானது தொடர்பாக, இலங்கை விமானப்படை அதிகாரிகளை விசாரிக்கக் கோரும் மனுவொன்றைப் அவரது மனைவி பேரியல் அஷ்ரப் தாக்கல் செய்யவுள்ளார்.

விமானப்படைக்கு இந்த விபத்தில் உள்ள தொடர்பு குறித்து விசாரணை நடத்துமாறு கோரியே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

அஷ்ரப் பயணம் செய்த ஹெலி, விபத்துக்குள்ளானது தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு தனது அறிக்கையில், குறித்த தினத்தன்று ஹெலி பயணத்தை மேற்கொள்வதற்கு முன்னர், அது பறப்பு நிலையில் இருக்கின்றதா எனப் பரிசோதிக்கவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், விமானப்படையின் பொறியியலாளர்களே இவ்விபத்துக்குப் பொறுப்பேற்க வேண்டும் என இவர்களுக்கு எதிராக வழக்குத்தொடுக்கப் பேரியல் அஷ்ரப் நடவடிக்கை எடுத்துவருகின்றார்.

## மருத்துவப் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

தேசிய பல்கலைக்கழக வைத்தியப் பட்டதாரிகளுக்கும், வெளிநாட்டுப் பல்கலைக்கழக மருத்துவபட்டதாரிகளுக்கும், நியமனங்கள் வழங்குவதற்குச் சுகாதாரத் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

பேராதனை, றுகுணு, ஸ்ரீஜயவர்த்தனபுர, கொழும்பு, களனிப் பல்கலைக்கழக மருத்துவப் பட்டதாரிகள் எதிர்வரும் 2ஆம் திகதி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

விண்ணப்பத்துடன்- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், இலங்கை வைத்திய சேவையில் பதிவு செய்த சான்றிதழ், அடையாள அட்டைகளுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## கிராம சேவகர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள்

(யாழ்ப்பாணம்)

கிராமசேவை உத்தியோகத்தர்களுக்குச் சலுகைக்கட்டண அடிப்படையில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தியத் தயாரிப்பான மோட்டார் சைக்கிள்களே வழங்கப்படவுள்ளன. எழுபத்தையாயிரம் ரூபா பெறுமதியான இம்மோட்டார் சைக்கிள்களுக்காக அறுபது மாதங்களில் 1200 ரூபா வீதம் செலுத்தக்கூடிய வகையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவிருக்கிறது. பெறுமதிக்கான முழுத் தொகையும் செலுத்தப்படும் வரை பதிவுப்புத்தகங்கள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் எனத் தெரியவருகிறது. (க)

# படுகொலைப் பூமியான இலங்கை இன்று அமைதிதேடுபவர்களின் பூமி!

### வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ

(கொழும்பு)

இலங்கையில் ஒருவருட காலம் யுத்தம் நிறுத்தப்பட்டு புரிந்துணர்வு உடன்பாடு வெற்றிகரமாக அமுல் நடத்தப்பட்டதையிட்டு நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் பெருமையடைய வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

மொறட்டுவையில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுதந்திரமடைந்த காலம் முதல் விடப்பட்டு வந்த தவறுகளைத் திருத்த இப்போது ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எனவே சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு, அரசாங்கம் தன்னாலான சகல முயற்சிகளையும் செய்யும்.

உலகில் படுகொலைப் பூமியாக இருந்த இலங்கை இன்று அமைதியான - அமைதியைத்தேடுகின்றவர்களின் பூமியாக, அவர்களுக்கு உதாரணமாக மாறியுள்ளது. வெளிநாட்டமைச்சர் என்ற வகையில் இதையிட்டு நான் பெருமையடைவதோடு, வெளிநாடுகளிலும் இதை வலியுறுத்துவேன் என அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ மேலும் தெரிவித்தார்.

## பேச்சுவார்த்தைக்கு உதவவே 'விசற்' தொடர்பு சாதனம் அனுமதி

### அரசு அறிவிப்பு

(கொழும்பு)

'விசற்' என்ற செய்மதித் தொலைத் தொடர்பு சாதனம் புலிகளுக்கு அனுமதித்தமைக்குக் காரணம், பேச்சுவார்த்தையில் ஈடுபடும் புலிகளின் குழுவுக்கும் புலிகளின் தலைமைப்பீடத்துக்கும் இடையிலான தொடர்பைப் பேணவே என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

வெளிநாடுகளில் பேச்சுக்களில் ஈடுபடும் புலிகளின் பிரதிநிதிகள்குழு, தமது தலைமைப்பீடத்துடன் கலந்துரையாடல்களை நடத்துவதற்கு இத்தொடர்பு சாதனம் அவசியம் என்பதாலேயே அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆயுதங்களைக் களையுமாறு இராணுவம் கேட்க முடியாது

### —மாவை சேனாதிராசா கருத்து—

புலிகளிடம் ஆயுதம் களைவது பற்றி இராணுவம் எதுவும் கேட்கமுடியாது. அரசாங்கம்தான் இதுபற்றி முடிவெடுக்க வேண்டும் என,

வடபகுதி இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவின் உயர் பாதுகாப்பு வலய மீள்குடியேற்றம் குறித்து வழங்கிய அறிக்கை பற்றிக் கருத்துத்தெரிவித்த மாவை சேனாதிராசா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஆயுதம் களைவது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. அரசியல் தீர்வு காணும் வரைக்கும் விடுதலைப்புலிகளிடமிருந்து ஆயுதம் களைவது நியாயமற்றது. தமிழர் தரப்பிலே ஈட்டப்பட்ட வெற்றிகளே புலிகளைப் பேச்சுவார்த்தைகளில் சமநிலையில் ஈடுபட வைத்துள்ளது.

மக்களுடைய பயிர்செய்கைக் காணிகளையும், வீடுகளையும் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவம் ஆக்கிரமித்துள்ளது. இது ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்தார்.

# திருமலையில் தமிழ் இலக்கிய விழா நேற்றுக் கோலாகலமாக ஆரம்பம்

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழ் இலக்கிய விழா நேற்றுத் திருக்கோணமலையில் கோலாகலமாக ஆரம்பமாகியது. வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சு இதனை ஏற்பாடு செய்திருந்தது. காலை 9.00 மணிக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்னால் இருந்து போராளர்கள், விருந்தினர்கள் தமிழ் இன்னிசை குழுவினர், தமிழ் அறிஞர்கள் போல் வேடம் தரித்த மாணவர்கள், விழா நடைபெறும் புனித சூசையப்பர் கல்லூரி மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

ஊர்வலம்- உட்துறைமுக வீதி, விகாரை வீதி, பிரதான வீதி, திருஞானசம்பந்தர் வீதி, தந்தை செல்வா வீதி வழியாக விழா மண்டபத்தை வந்தடைந்தது.

மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.தியாகலிங்கம் தலைமையில் விழா ஆரம்பமானது. இந்நிகழ்வுகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் திருக்கோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.திலக், நகர அரசியல் பொறுப்பாளர் வி.ராஜேஷ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தமிழ்த்தாய் வணக்கத்துடன் ஆரம்பித்த விழாவில் அமைச்சின் செயலாளர் எஸ்.தியாகலிங்கம் தமிழ் அன்னைக்கு மலர் மாலை அணிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஓவியம், சஞ்சிகைகள், சவற்காரச் சிற்பங்கள் இடம்பெற்றிருந்த கண்காட்சியை எஸ்.தியாகலிங்கம் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, ஆய்வரங்கம் ஈழகேசரி பொன்னையா அரங்கில் ஆரம்பமானது. இதற்குக் கல்வி அமைச்சின் செயலாளர் தலைமை வகித்தார்.

ஈழத்தில் இலக்கியச் சஞ்சிகைகள் சாதித்தவையும் சாதிக்க வேண்டியவையும் என்னும் தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ.யோகராசா, ஈழத்தில் பெண்கள்சார் தமிழ் சஞ்சிகைகள் என்னும் தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் திருமதி றூபி வலன்ரினா பிரான்சிஸ், ஈழத்து இதழியலில் தேசிய தமிழ் நாளிதழ்களின் தோற்றமும் இலக்கியப் பங் களிப்பும் என்னும் தலைப்பில் கவிஞர் புரட்சிபாலனும் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

(06)

# தெற்கின் குழப்பவாதிகளுடன் கைகோர்க்கும் இராணுவத்தின் கடும்போக்கு நிலைப்பாடு!

அரசாங்கமும் அதன் இணைக் கட்சிகளும் தொடர்ந்தும், தமது தேர்தல் கால வாக்குறுதிகளை



நினைவூட்டுவதுடன், அதனைச் செயற்படுத்த உறுதிபூண்டிருப்பதாகவும் கூறிவருகின்றன. மறுபுறத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி- அரசாங்கத்தைக் குறைகூறுவதன் மூலம், தமது கடந்தகால, தற்போதைய தவறுகளை மறைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறது.

சுமார் 20 ஆண்டுகளாக போரைக் காரணம்காட்டி, இனவாதத்தை வளர்த்து, அபிவிருத்தியைப் பின்னடித்து வந்த பிரதான இரண்டு கட்சிகளும், இன்று அந்த போருக்குப் முடிவைத் தேட வழிகளைச் சொல்லிகொண்டிருக்கின்றன.

சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான கருத்துக்கள் மற்றும் நடவடிக்கைகள் இன்று பூதாகரமாக வளர்ந்துள்ளன. அவற்றுக்குள் இருந்து மீளமுடியாத வகையில் இரண்டு கட்சிகளும் திண்டாடுகின்றன. இதன் காரணமாகவே, அந்த இரண்டு கட்சிகளுக்கும், இனப்பிரச்சினைத்தீர்வு விடயத்தில் விட்டுக்கொடுப்புக்களைச் செய்ய முடியாதுள்ளது. குறுகிய மனப்பான்மை, தேசிய நலனில் அக்கறையின்மை போன்ற காரணங்களினால் இலங்கையின் அரசியல் வரலாறு கறைபடிந்து போயிருக்கிறது.

சுதந்திரம் பெற்று அரை நூற்றாண்டு கடந்த போதிலும், நாட்டு மக்களின் முழுமையான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் அரசியலமைப்பைக் கொண்டிருக்காத நாடு- இலங்கை என்கிறபோது, அரசியல் தலைமைகளின் சாணக்கியமற்ற தன்மையை உணர்ந்துகொள்ளமுடிகிறது. வரலாறுகளில் இலங்கையின் சிறப்புத்துவப் பதிவுகளைக் காட்டிலும், இலங்கையின் இன முறுகல்களே வரலாறுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இரத்தம் சிந்தாத புரட்சியின் மூலம் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தமை இதற்கான பிரதான காரணம் எனலாம். மக்கள் மத்தியில் இலங்கையர் என்ற எண்ணம் இதுவரை ஏற்படவில்லை. தம்மைச் சிங்களவர்கள் எனச் சொல்லிக் கொள்ளவே பெரும்பான்மையினர் விருப்பம் கொண்டுள்ளனர். அதேபோல், தமிழர்களும் முஸ்லிம்களும் இலங்கையர் என்றல்லாமல் இனத்துவ அடிப்படையிலேயே நோக்கப்படுகின்றனர்.

இதன் அடிப்படையிலேயே இலங்கையில் வரலாறு படைத்த தமிழ் அரசர்கள், அறிஞர்கள் மற்றும் பெரியார்களின் பதிவுகளும் சிங்களவர்களால் மறைக்கப்படுகின்றன. இலங்கை நாடு முழுமையான சிங்கள பௌத்த நாடு என போற்றப்பட்டதன் விளைவே, நாடு இன்று சீரழிவின் படியில் இருப்பதற்கான காரணமாகும். வரலாற்றுத் தவறுகள், நடைமுறையில் சமூகங்களுக்கு இடையில் விரிசல்களை நிரந்தரமாக்கியுள்ளன. இந்த விரிசல்களின் அகலத்தைக் குறைத்துச் சமூகங்களுக்கு இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் முயற்சிகள் தற்சமயம் அரசாங்கத் தரப்பினால் எடுக்கப்பட்டுவருவதுபோல் தோன்றுகின்றது. எனினும் நாட்டின் நலனைக் கருத்திற் கொள்ளாத ஏனைய மாற்றுக் கட்சிகள், சமூகங்களுக்கு இடையிலான விரிசல்களை நிரந்தரமாக வைத்துக் கொள்ளவே விருப்பம் கொண்டுள்ளன. இதன் மூலமே, தாம் அரச அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என அந்தக் கட்சிகள் எண்ணம் கொண்டுள்ளன. இலங்கையின் அரசியல் வரலாற்றில் இனவாதம் மறறும் துவேஷ மனப்பான்மை என்பன சிங்கள அரசாங்கங்களை ஆட்சியில் அமர்த்த உதவின. எனினும் இன்று நிலைமை மாறியிருக்கிறது. இனவாதச் சாயம் சிங்களவர் மத்தியில் இருந்து தளர்ந்து செல்கிறது. போரின் மூலம் படையினர் தமிழீழ விடுதலைப்புலிகளைத் தோல்வி காணச் செய்வர், அதன் அடிப்படையில் சிங்கள இனம் தனிப்பெரும் இனமாகத் திகழும் என்ற குரூர எண்ணம் சிங்கள மக்கள் மத்தியில் இருந்து விலக்கிக் கொள்ளச் செய்யப்பட்டுள்ளமை இதற்குப் பிரதான மூல காரணமாகும்.

மறுபுறத்தில் நாட்டின் பொருளாதார வீழ்ச்சி, சிங்களவர், தமிழர் என்ற பாகுபாடில்லாமல் அனைவரையும் பாதித்திருப்பது இந்த நிலைப்பாட்டின் மற்றொரு காரணியாகும்.

இவ்வாறான சூழ்நிலையில் முன்னெடுக்கப்பட்டுள்ள சமாதானமே கடந்த ஒரு வருடகாலமாகத் தாக்குப் பிடித்து நிற்கிறது என்பது தெளிவு.

நடைமுறைச் சமாதான முன்னெடுப்புகளில், வடக்கு - கிழக்கு சக்திகள், தென்னிலங்கை சக்திகள் என இரண்டு பிரிவுகள் தாக்கங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் செல்வாக்கு, மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏகபிரநிதித்துவம் என்பன எதிர்ப்புச் சக்திகளாக கருதப்படும் கட்சிகள் மற்றும் குழுக்களிடையே எதிர்ப்புணர்வுகளைத் தோற்றுவித்துள்ளன.

இந்த நிலையிலும் முன்னெடுக்கப்படும் சமாதானம் முன்னரைவிட, சற்று முன்னேற்றகரமாக சென்று கொண்டிருக்கிறது. இலங்கை அரசாங்கம் இன்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு- சமஷ்டி முறையே என்ற இணக்கப்பாட்டிற்கு வந்திருப்பது இதுவே முதற்தடவையாகக் கொள்ளலாம். ஏற்கனவே சமஷ்டி முறையை 50 வருடங்களுக்கு முன்னர் தந்தை செல்வா முன்வைத்தபோது, அதனைச் சிங்கள அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாமைக்குக் காரணம் சொல்லப்படுகின்றது. தமிழர்கள் இலங்கையின் சுதந்திரத்தில் முழுமையாகப் பங்காற்றினார்கள், வரலாற்றைக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை சிங்கள அரசாங்கங்கள் உணர்ந்திருந்தபோதும், சமஷ்டிக் கொள்கையை முன்வைத்த வேளையில்- தமிழ்த் தலைமைத்துவங்களிடம் ஒற்றுமை நிலவவில்லை. ஒரு தலைமைத்துவம் சமஷ்டிமுறை வாய்ப்பைக் கேட்டவேளையில், மறுதரப்பு அரசியல் பங்கீட்டு முறையை முன்வைத்தது. தமிழ் தரப்புக்களின் மத்தியில் காணப்பட்ட இந்த முரண்பாட்டை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய சிங்கள அரசாங்கம் தழிழருக்கான தீர்வை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளவில்லை.

அன்று சமஷ்டி முறையை சிங்கள அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருந்தாலும், அதனை நடைமுறைப்படுத்தியிருக்கும் என்பதற்கு எந்த உறுதிப்பாடுமில்லை. இன்றைய நிலையைக் காட்டிலும் அன்று சிங்கள சக்திகள் வலுவான நிலையில் தமது எதிர்ப்பை வெளிக் காட்டியிருந்தால் 'சமஷ்டித் தீர்வு' பேச்சு அல்லது ஒப்பந்தம் என்ற வடிவில் மாத்திரமே இருந்திருக்கும்.

இன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் ஒரே நோக்கைக் கொண்ட போராட்டம், சிங்கள அரசாங்கம் ஒன்று 'சமஷ்டி' என்ற தீர்வை ஏற்றுக் கொள்ளச் செய்திருப்பதுடன் அதற்கான முன்னமைப்புக்களை- சர்வதேச சமூகத்தின் உதவியுடன் அந்த அரசாங்கமே முனைபபுடன் மேற்கொள்ளவும் அழுத்தம் தந்துவருகிறது.

தமிழரின் வீரவரலாற்றை நூல் வடிவில் மாத்திரமே தெரிந்து வைத்திருந்த சிங்களத் தலைமை இன்று அதனை நேரடியாக அனுபவித்த போது, தீர்வுக்கான அழுத்தத்திற்கும் ஆட்படவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியிருக்கின்றது.

மறுபுறத்தில், தமிழர்களுக்கு எதிரான சிங்கள சக்திகள் நடைமுறைச் சமாதானத்தை குழப்பியடிக்க முனைந்து வருகின்றன.



இவை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான மாற்றுத்தமிழ் கட்சிகளைத், தமது பிரசாரத்திற்கு உறுதுணையாக முன்வைக்கின்றன. பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அரசாங்கம் ஆட்சியிலிருந்த வேளையில், தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தீர்வுப் பொதியை முன்வைத்தார். அந்தத் தீர்வுப் பொதி அவிழ்க்கப்படாமலேயே காணாமல் போனது உண்மை. ஆனால், அதில் அடங்கியிருந்ததாக கூறப்படும் விடயங்கள் தமிழர் பிரச்சினைக்குச் சிறந்த தீர்வைத் தந்திருக்கும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஜனாதிபதியின் தீர்வுத்திட்டம் இடையில் முறிந்தமைக்கு அவரிடம் அரசியல் சாணக்கியம் இருக்கவில்லை என்றே கருதவேண்டியுள்ளது. பிரச்சினைக்குத் தீர்வுப் பொதி ஒன்றைத் தயார் செய்த ஜனாதிபதியால், தமிழீழ விடுதலைப் புலிகளை எவ்வாறேனும் பேச்சுவார்த்தைக்கு அழைப்பது என்ற விடயம் தெரிந்திருக்கவில்லை.

சமாதானம் என்ற கோஷத்தை முதலில் முன்வைத்த ஜனாதிபதி, பின்னர் வந்த காலப்பகுதியில் போரின் மூலம் சமாதானம் என்ற நிலைப்பாடடுக்குத் தம்மை மாற்றிக் கொண்டார். இந்த நிலைப்பாடு அவரின அரசியலுககே எதிரியாகும் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. இதுவே அவரிடம் அரசியல் சாணககியம் இல்லை என்ற முடிவுக்கு இட்டுச்சென்றுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பொறுத்தவரையில் அன்று படையினர் "சூரியக் கதிர்" நடவடிக்கையின் மூலம், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன், தமிழீழ விடுத்லைப்புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைக்கச் சந்தர்ப்பம் இருந்தது. எனினும் சந்திரிகாவின் அரசாங்கம் தமிழீழப் போரியல் வரலாற்றைக் கருத்திற் கொள்ளாமல், இராணுவ முனைப்பில் தீவிரம் காட்டியது. அதன் காரணமாகவே நினைத்தபடி வெல்ல முடியாத சமர் ஒன்றுக்கு வெற்றி நிச்சயம் எனப் பெயர் சூட்டி அதனை தோல்வி நிச்சயம் என்ற நிலைக்கு கொண்டு வந்தது. இது ஆட்சி மாற்றம் பெறும் அரசாங்கம் ஒன்றுக்கு சாதாரண விடயமே! என்றாலும் இலங்கை இராணுவத்தின் வலிமையை தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னால் விட்டுக்கொடுத்த சம்பவம் எனச் சிங்கள ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதற்கு ஆதாரமாக வெற்றி நிச்சயம் நடவடிக்கை தோல்வியடைந்ததன் பின்னரே, தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்ச்சியான வெற்றித்தாக்குதல்களை மேற்கொண்டு - இன்று அரசாங்கத்துடன் சமமான நிலையில் இருந்து பேச்சு நடத்தும் நிலையை அடைந்திருக்கின்றனர்- என்பதே சிங்கள ஆய்வாளர்களின் கருத்தாகும்.

எது எப்படியிருப்பினும், தமிழீழ விடுதலைப் புலிகள் இன்று தமது நோக்கில் வெற்றி பெற்று வலுவான நிலையில் சிங்கள அரசாங்கம் ஒன்றுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் போர்நிறுத்தம் செய்து கொள்ளப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகிறது. இதற்குள் சமாதான பேச்சுவார்த்தைகளும் முன்னேற்றத்தை கண்டிருக்கின்றன. எனினும் தற்சமயம் எழுந்திருக்கும்- அதியுச்சப் பாதுகாப்பு வலயத்தில் [illegible]குடியேற்றம் என்ற விடயம் மீண்டும் இராணுவத் தரப்பின் மீது அ[illegible]வரின் பார்வையையும் திசைதிருப்பி



யுள்ளது. பேச்சுவார்த்தைக்கு வரவேண்டுமானால் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களை[illegible] கைவிடவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வந்த [illegible]ரசாங்கமே அதனைப் பற்றிப் பே[illegible]ந்த போது, அதியுச்சப் பாதுகாப்பு வலயம் தொடர்பாகப் படைத்தரப்பு ஆயுதக்களைவை கோருவது யதார்த்தம் அல்ல. ஆனால், தமது வலிமையை இந்தத் தருணத்திலாவது காட்ட வேண்டும் எனப் படைத்தரப்பு முடிவெடுத்திருப்பது போல் தெரிகிறது. ஏற்கனவே அதியுச்ச பாதுகாப்பு வலயம் தொடர்பாகப் படைத்தரப்பு தமது அறிக்கையை கையளித்தபோது, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்த கூற்று இங்கு நோக்கப்படல் வேண்டும். இராணுவத்தினரின் அறிக்கை இறுதி அறிக்கை அல்ல என அவர் குறிப்பிட்டிருந்தது, சமாதான முன்னெடுப்பில் படைத்தரப்பின் மேலாதிக்கம் எடுபடாது என்பதை எடுத்துக்காட்டியுள்ளது. என்றாலும் படைத்தரப்பினர் சிங்களப் பிற்போக்குச் சக்திகளுடன் இணையும் ஆபத்து இருப்பதால் சமாதான நகர்வில் பாதிப்புக்கள் ஏற்படுவது நிச்சயமே.

இந்நிலையில் அரசாங்கத்துக்கு எதிரான தென்னிலங்கை கட்சிகளுக்கு விவாதத்துக்கான தற்காலிக விடயம் ஒன்று கிடைத்திருக்கிறது. கடந்த இரண்டு வார காலமாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வானொலி உபகரண[illegible]கள் அனுப்பப்பட்டமை தொடர்பான கருததுககளை முன்வைத்து வந்[illegible]தனை நிலங்கைக் கட்சிகள், எதி[illegible]வரும் நாட்களில் உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படுவது பற்றியே உயர்குரலில் இனவாதத்தைக் கக்கப்போகின்றன என்பதை நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

## தெற்குத் திசையினிலே....

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

---

# முன்பள்ளி மாணவர்களுக்கு இலவச சத்துணவு விநியோகம்

## வலிகாமம் பனை, தென்னை வளக் கொத்தணி ஏற்பாடு

வலிகாமம் பனை தென்னை வளக் கொத்தணி 46 முன்பள்ளிகளைச் சேர்ந்த 2500 முன்பள்ளி மாணவர்களுக்குச் சத்துணவுத் திட்டத்தை அடுத்த வருடமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கடந்த நான்கு வருடங்களாகச் சத்துணவுத்திட்டத்தினை வலிகாமம் பனை, தென்னை வள கொத்தணி, நிறுவன இலாபத்திலேயே இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அத்துடன் கடந்த 1999ஆம் ஆண்டு இலவச சீருடையை 2000 முன்பள்ளி மாணவர்களுக்கு வழங்கியது.

கொத்தணியுடன், சர்வதேச சமூகநிறுவனம் ஒன்று இணைந்து உதவி வழங்கினால் அடுத்த வருடமும் வலிகாமம் பனை, தென்னை வளக் கொத்தணிப் பிரதேசத்துக்கு உட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்குச் சீருடையும் வழங்கலாம் என்று கொத்தணித் தலைவர் ஆ.மெய்ப[illegible]கன் தெரிவித்துள்ளார். (கி)

# பொலிஸாருக்கு எதிரான மக்களின் முறைப்பாடுகள் மீது விசாரணை

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்துக்கு எதிராக பொது மக்களால் செய்யப்பட்ட புகார்கள் குறித்த விசாரணைகளை சுயாதீன பொலிஸ் ஆ[illegible]க்குழு அடுத்த ஆண்டில் தீவிரமாக மேற்கொள்ளவுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தில் நிலவுகின்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்து பெருமளவிலான புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இ[illegible]வை தொடர்பான விசாரணைகளே அடுத்த வருடத்தில் தீவிர[illegible]க மேற்கொள்ளப்பவுள்ளன.

அதேவேளை பொலிஸ் சேவையில் உள்ளவர்களும் தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம் என்றும் இவ் ஆணைக்குழு பகிரங்க அறிவித்தல் விடுத்துள்ளது.

# சுண்டங்காய் காற்பணம்; சுமைகூலி முக்காற்பணம்!

வழக்கம்போலவே புதிய ஆண்டுக்கான செயற்திட்டங்களை தயாரிப்பதற்காக, விடைபெறும் ஆண்டின் இறுதிக்காலத்தைப் பயன்படுத்துவதில் பல நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன.

அரச நிறுவனங்கள் மட்டுமல்ல, அரச சார்பற்ற நிறுவனங்களும் கூட கடந்த இரு மாதங்களாக புதிய ஆண்டில் எப்படிச் செயற்படுவது என்பது பற்றியே சிந்தித்து வருகின்றன.

கடந்து சென்ற மழைநாள் ஒன்றில், யாழ்.கோவில் வீதியில் அமைந்திருக்கும் 'அந்த' அலுவலகத்தில் நீண்ட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அது கலந்துரையாடலாக ஆரம்பித்து பேரம்பேசுவதில் முடிவடைந்தது. இந்த நீண்ட பேரம் பேசுதல் வேறொன்றுக்குமல்ல, யாழ்.மாவட்டத்தில் புதிய ஆண்டில் செயற்படவிருக்கும் பாரிய செயற்திட்டம் ஒன்றுக்கான கமிஷன் தொகை பற்றியதாகவே இருந்தது. "கமிஷன தொகை" என்ற பதத்தை இக்கலந்துரையாடலில் "நிர்வாகச் செலவுக்கான தொகை" என்று மிக நாகரிகமாக உச்சரிக்கப்பட்டது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் சுமார் முந்நூறு மில்லியன் ரூபாவை, யாழ்.குடாநாட்டில் புதிய ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வு செயற்திட்டங்களுக்காக வழங்க முன்வந்துள்ளது. இந்த நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படவிருக்கும் செயற்திட்டங்களை யார் செயற்படுத்துவது என்பதும், திட்டங்களைச் செயற்படுத்துபவருக்கு நிர்வாகச் செலவு என்ற பெயரில் எவ்வளவு தொகைப்பணத்தை வழங்குவது என்பதுவுமே இவ்விடயத்தில் தற்போது உள்ள பிரச்சினை. இதற்காகவே இந்த நீண்ட பேரம் பேசல் நடைபெற்றது.

செயற்திட்டத்துக்கு ஒதுக்கப்படும் நிதியின் நாற்பது வீதமான தொகையை தமக்கு நிர்வாகச் செலவாக வழங்கவேண்டும் என்று திட்டத்தை செயற்படுத்த முன்வநத நிறுவனம் விடாப்பிடியாக நின்று கொண்டது. இதனால் பேரம்பேசும் சந்திப்பு நீண்டு கொண்டே சென்றது. நிர்வாகச் செலவுக்கான தொகையை குறைக்கும்படி நிதி வழங்க முன்வந்த அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தொடர்ந்தும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டது.

## திரை மறைவில்
பனைக்காட்டு நரியார்

இவ்விடயத்தில் அதிகம் விட்டுக் கொடுப்பதற்கு முன்வரமுடியாத நிலையில், இந்தத் திட்டத்தை செயற்படுத்தும் நிறுவனம் குறைந்த பட்சம் இருபத்தியாறு வீதமான பணம் தமக்கு நிர்வாகச் செலவாக தரப்படவேண்டும் என்றும் கூறியது. இதுவே இந்நிறுவனம் கோரும் மிகக்குறைவான தொகை. இதற்குக் கீழேயும் இறங்கிச் செல்வதற்கு அது தயாராக இல்லை.

மாலைப் பொழுது நெருங்கியது. எனினும் முடிவுகள் எதுவும் எடுக்கப்படாமல் சந்திப்பு நிறைவடைந்தது. இதன்பின்னர் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனம் யாழ்.அரச செயலகத்தை நாடிச் சென்றது. அங்கேயும் ஒருவகையான பேரம்பேசல்தான். ஆனால் நிர்வாகச் செலவுக்காக அவர்கள் கோரிய தொகை ஒப்பீட்டளவில் மிகக்குறைவு. இதனால் புதிய ஆண்டுக்கான மேற்படி செயற்திட்டம் அரச நிர்வாகக் கட்டமைப்பின் மூலமாக செயற்படுவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

யுத்தத்தால் சிதைவடைந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் வழங்கும் நிதி உதவிகளில் கணிசமான பங்கு நிர்வாகச் செலவு என்ற போர்வையில் கரைந்து விடுவது, அண்மைய வருடங்களில் யாழ்.மாவட்டத்தில் அதிகமாக நடந்தேறியுள்ளது. இனிவரும் காலத்தில் இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அனைத்துத்தரப்பும் விழிப்புடன் செயற்படுவது அவசியம்.

## சின்னஞ் சிறுசெய்திகள்

### புற்றுநோயாளருக்கு உதவி

ஊரெழுவில் இயங்கி வரும் புற்று நோயாளர்களுக்கு உதவி வழங்கும் சர்வதேச நிறுவனம், யாழ குடாநாட்டில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள 17 நோயாளர்களுக்கு கொழும்பில் இலவச சிகிச்சை பெற உதவி வழங்கியுள்ளது .

போக்குவரத்து, உணவு தங்குமிடம் ஆகிய வசதிகளையும் இலவசமாகச் செய்து கொடுத்துள்ளது.

இதேவேளை- தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலையின் சேவையினை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (96)

### வழிப்போக்கரிடம் ஏமாந்த சிப்பாய்

புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்திக்கு அருகிலுள்ள காப்பரணில் காவல்கடமையில் இருந்த இராணுவச்சிப்பாய் சிகரெட், கேக் வாங்கித் தருமாறு கொடுத்தனுப்பிய ரூ.1000 பணத்துடன் வழிப்போக்கர் ஒருவர் தலைமறைவாகி விட்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட இராணுவச்சிப்பாய் அங்கு செல்லும் மக்களிடம் தான் பணம் கொடுத்தனுப்பிய வழிப்போக்கரின் அங்க அடையாளங்களைக் கூறி, மேற்படி நபரை உடனடியாக அழைத்துவருமாறு தெரிவித்துவருகின்றார். (83)

## பாதீனிய ஒழிப்புக் களைநாசினி விவசாயத் திணைக்களம் வழங்கும்

புன்னாலைக்கட்டுவன்- ஈவினைப்பகுதியில் பரவியுள்ள பாதீனியக் களையை, களை நாசினி விசிறுவதன் மூலம் அழிப்பதற்கு, விவசாயத்திணைக்களம் உதவுவதாக அறிவித்துள்ளதாக ஈவினைப் பகுதி விவசாய சம்மேளனச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பாதீனியக்களை பூத்துக் காணப்படும் இவ் வேளையில், களை நாசினி விசிறுவது பொருத்தமானதாகும். நாட்கள் கழிந்த பின்களை நாசினி விசிறுவதன் மூலம் பாதீனியத்தை ஒழிப்பது இயலாததென்பதால் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு விவசாயத் திணைக்களத்தை இப் பகுதி விவசாயிகள் கோரியுள்ளனர்.

## வெலிசற கடற்படைத் தளமருகே வெடிப் பொருட் களஞ்சியத்தில் தீ!

வெலிசறை கடற்படைத் தளத்துக்குப் பின்புறமாக இருந்த அரச வெடி பொருட்களஞ்சிய வளாகத்தில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட வெடி விபத்தினால் பாரிய தீ ஏற்பட்டது.

15 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த வெடிபொருட்கள் புதைத்து வைக்கப்பட்டிருந்த இடத்திலேயே இவ்விபத்து ஏற்பட்டது. காலாவதியான வெடிபொருட்கள் இதில் அழிந்து போனதாக கடற்படைப் பேச்சாளர் கொமடோர் ஏ. ஆர்.சமரசிங்க தெரிவித்தார்.

கடற்படைத் தளத்திற்குப் பின்புறமாக - அரச வெடிபொருட் களஞ்சிய வளாகத்தில் ஏற்பட்ட தீ, பெரியளவில் பரவுவதற்கு முன்னர் 20 நிமிடங்களிலேயே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு விட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## கிளிநொச்சிக்கு மேலும் 20 தொலைபேசிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மேலும் இருபது தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

கிளிநொச்சி தபாலகத்தில் இதற்காக பாரிய கோபுரம் ஒன்று அமைக்கும் வேலை இடம்பெறுகின்றது. இக்கோபுரத்தின் மூலம் அறுபது தொலைபேசி இணைப்புக்களை வழங்கக்கூடியதாக இருந்தும் இருபது இணைப்புக்களே வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை- மடுப்பிரதேசத்திலும் தற்காலிக கோபுரங்களை அமைத்து தொலைபேசி இணைப்புக்களை வழங்குகின்ற பணி இடம்பெற்று வருகின்றது. (02)

## இன்றைய நாள் இனிய நாள்

**29-12-2002 - ஞாயிற்றுக்கிழமை**

**சித்திரபானு ஸ்ரீ, மார்கழி மீ, - 14ஆம் திகதி**

| | |
|---|---|
| *திதி* | :- அபரபட்ச தசமி பகல் - 11.28வரை அதன் மேல் ஏகாதசி. |
| *நட்சத்திரம்* | :- சுவாதி - 10.41 வரை, அதன் மேல் விசாகம். |
| **மேடம்** | :- தேகசுகம் நன்று, பணவரவு நன்று, மனமகிழ்ச்சி, நண்பர்கள் உறவினர்கள் சங்கமம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| **இடபம்** | :- தேகசுகம் நன்று, பணவரவு நன்று, உளப்பூரிப்பு, புதிய கடன்வசதி, நோய் நீக்கம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம். |
| **மிதுனம்** | :- தேகசுகக்குறைவு, கொடுக்கல் வாங்கல் சிக்கல், வீட்டில் சுகயீனம், வைத்தியச்செலவு, கல்வியில் ஊக்கம் வேண்டும். வியாபாரம் முன்னேற்றம். |
| **கர்க்கடகம்** | :- மாதா தேகசுகக்குறைவு, வைத்தியச்செலவு, வீட்டில் செலவு, பணவரவு தாமதம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம், |
| **சிங்கம்** | :- தேகசுகம் நன்று, பணவரவு, புதிய தொழில் முயற்சி, செய்தொழில் லாபம், கல்விச் சமநிலை, வியாபாரம் சமநிலை. |
| **கன்னி** | :- வரவு செலவு தானாகத் தேடிவரும், சேமிப்புத்திட்டம் இல்லை, வீண் வாக்குவாதம், பெண்கள் தேவையற்ற விடயங்களில் தலையிடுதல், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை. |

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.**

| | |
|---|---|
| **துலாம்** | :- தேகசுகம் நன்று, பணவரவு, நண்பர்கள் உறவினர் சங்கமம், விருந்துபசார மகிழ்வு, வீட்டில் உளப்பூரிப்பு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம். |
| **விருச்சிகம்** | :- தேகசுகக்குறைவு, வீண்செலவு, தேவையற்ற பயம், வீண் வாக்குவாதம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| **தனு** | :- தேகசுகம் நன்று, பணவரவு, தெய்வதரிசனம், சற்சங்கம், செய்தொழில் லாபம், கல்வி சமநிலை, வியாபாரம் சமநிலை. |
| **மகரம்** | :- தேகசுகம் நன்று, பணவரவு, தொழிற்சிறப்பு, செய்தொழில் லாபம், வீட்டில் மகிழ்வு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை. |
| **கும்பம்** | :- தேகசுகக்குறைவு, பணவரவு குறைவு, பிதா தேகசுகக்குறைவு, வைத்தியச்செலவு, சமூகசேவையைத் தவிர்க்கவும், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் முன்னேற்றம். |
| **மீனம்** | :- தேகசுகக்குறைவு, பணவரவு குறைவு, தூரப்பிரயாணம், புதிய காரியங்கள் தவிர்க்கவும், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை. |

## குடும்பம் அன்பின் உறைவிடம்

ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் இணைந்து குடும்பங்கள் அமைக்கும் விநோதமான காலமிது. 'குடும்பம்' என்றால் என்ன என்பதை உணராமல் இன்று உலகம் சுழனறு கொண்டு இருக்கின்றது. விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத்திலும் வளர்ச்சிகாண ஆசைப்படும் மனித உள்ளம் சாதாரண குடும்ப உறவல் ஆழம்பெற பின்நிற்கின்றது. அவசர உலகப்போக்கினால் இன்று உறை நிலையையடைந்த குடும்பவாழ்வு அன்புறவில் மலரவைக்கப்பட வேணடியுள்ளது.




இன்று கத்தோலிக்க திருச்சபை அனைத்துக் குடும்பங்களுக்கும் மாதிரியான நசரேத்தூர் இயேசு- மரியா - யோசேப்பு என்ற திருக்குடுமபத்தின் திருவிழாவைக் கொணடாடுகின்றது. மனித வரலாற்றில் ஏழைக்குடும்பமாகத் தம் பொறுப புணர்ந்து வாழ்ந்த குடும்பமே இத் திருக்குடும்பம். யோசேப்பு தச்சு வேலையைச் செய்து, தனது குடும்பத்தை வழிப்படுத்திய ஒரு தந்தையாகவும், நீதிமானாகவும் இருந்தார். மரியா தன் குடும்பப்பொறுப்பை நனகுணர்ந்து இறுதிவரை பொறுப்புணர்வுடன் வாழ்ந்த தாய். இயேசு வளர வளர ஞானத்திலும் அறிவிலும் வளர்ந்து முப்பது வருடங்களாகப் பெற்றோருக்கு கீழ்ப் படிந்திருந்த மகன்: ஆயினும், தனது பன்னிரண்டாவது வயதில் தன் பணியை உய்த்துணர்ந்து வெளிப்படுத்தினார் (லூக் 2:49).

குடும்பத்தின் அத்திவாரம் கணவனும் மனைவியுமே. இறைவன் ஆணும் பெண்ணுமாக மனிதரைப் படைத்தார் (தொ.நூ.1:28). இல்லற வாழ்வு இறைவனின் உன்னத அழைப்பு. குடும்பம் இறைவன் படைப்புத் தொழிலைத் தொடர்ந்து ஆற்றும் அழைப்பைப் பெற்றுள்ளது. இதன் வழியாக இறைச்சாயலைத் தொடர்ந்தும் உலகிற்கு தந்து கொண்டிருக்கிறது. ஒரு சமூகத்தின் உயிரே குடும்பமாகும். சமுதாயத்தின் விளைநிலம் குடும்பமே. குடும்பங்கள் பண்பட்ட நல்ல நிலமாக இருந்தால் தான் அதில் விளையும் பயன்கள் பிறருக்கும் பலனளிக்கும்.

ஆனால், துரதிஷ்டவசமாக இன்று ஒரே கூரையின் கீழ் எதிர் முனைகளாக வாழும் கணவனும் மனைவியும், பிள்ளைகளை வழிப்படுத்த முடியாதவர்களாகவும் அவர்கள் உணர்வுகளை புரிந்து கொள்ள முடியாதவர்களாகவும் மாறியுள்ளனர். 'என்வழி தனிவழி' யென உலா வரும் தந்தையும், சுயநலம் மேலோங்கி குறுகிய மனப்பான்மையால் பொறுப்பிழந்து வாழும் தாயும், கால்போன போக்கில் அலைந்து திரியும் பிள்ளையும் ஒரு குடும்பமாக வாழமுடியாது. குடும்பம் ஓர் அமைப்பு முறை. அதில் கணவன், மனைவி, பிள்ளைகள் என மூன்று பிரிவுகள் உள்ளன. இவற்றுள் ஒன்று சரியான முறையில் இயங்காவிட்டால் குடும்பம் என்ற முழு அமைப்பும் பாதிக்கப்படும்.

குடும்பத்தினுள் பல பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனாலும், எந்தக்குடும்பத்தில் அன்பும், விட்டுக்கொடுப்புக்களும், பொறுப்புணர்வுகளும் தலைதூக்குகின்றதோ அக்குடும்பம் தெய்வீக தரிசனத்தைச் சமூகத்திற்குத் தரும் ஜோதி. அன்பே குடும்பத்தின் ஆணிவேர்.

**அருட்சகோ.அ.பீ.திருமகன்.**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# முனீஸ்வரன் வீதி அங்காடி காணிகளின் உரிமையாளர்கள் மாநகர சபை மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தனியாருக்குச் சொந்தமான காணிகளில் யாழ்.மாநகரசபை அங்காடி வியாபாரிகளுக்கு இடம் ஒதுக்கீடு செய்துள்ளதை எதிர்த்து, காணிச் சொந்தக்காரார்கள் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய ஏற்பாடு செய்து வருகின்றனர்.

யாழ்.நகரில் முனீஸ்வரன் வீதிப் பகுதியில் அண்மையில் அமைக்கப்பட்ட அங்காடி வியாபார நிலையங்கள் சில தனியார் காணிகளில் அமைக்கப்பட்டுள்ளன. இவ் அங்காடி வியாபார நிலையங்களை அமைப்பதற்கான இட ஒதுக்கீட்டை யாழ். மாநகரசபையே செய்து கொடுத்தது.

பல கடைகள் அரச காணிகளிலும் வேறு சில கடைகள் தனியார் காணிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. இக் கடைகளுக்கான குத்தகைப் பணமாக நாளாந்தம் முப்பது ரூபா அறவிடப்பட்டு வருவதாக அங்காடி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை இப்பகுதிக்கு அண்மையில் விஜயம் செய்த இக் காணிச் சொந்தக்காரர் சிலர், தமது காணிகளில் அங்காடி வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டதுடன், முன் அனுமதியின்றி தமது காணிகளில் அங்காடி வியாபார நிலையத்திற்கு இடம் ஒதுக்கிய யாழ்.மாநகரசபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதுடன் யாழ். பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

## தேசிய கல்வியியல் கல்லூரியின் நாடக, அரங்கியல் பாடநெறிக்கு மாணவிகளே அதிகளவில் தெரிவு!

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை உள்வாங்குவது தொடர்பாக நடைபெற்ற நேர்முகத் தேர்வில், நாடகமும் அரங்கியலும் பாடநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாடகமும் அரங்கியலும் பாட நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் கட்டாயம் சங்கீதம் அல்லது நடனத்துறையை க.பொ.த. உயர்தரத்தில் பயின்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையால் பெருமளவில் மாணவிகளே இப் பாடநெறிக்கு தெரிவாகியுள்ளதாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

## கட்டாக்காலி நாய்கள் யாழ்.நகரில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகின்றது.

பிரதான வீதிகளில் செல்லும் பயணிகள் இதனால் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றனர்.

யாழ்.வைத்தியசாலையை அண்டிய பகுதிகளிலும் கட்டாக்காலி நாய்கள் அதிகளவில் உலா வருவதைக் காணமுடிகின்றது.

கட்டாக்காலி நாய்களின் தொல்லையால் பாதிக்கப்பட்ட மக்கள் இவற்றின் தொல்லைகள் தீர்வதற்கு உரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் எப்போது எடுக்கப் போகின்றார்களோ எனக் கவலை தெரிவித்தனர்.

## விசேட விமான ஒழுங்கு

(கொழும்பு)

எதிர்வரும் 3 ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் விசேட விமானம் மூலம் ஐயப்ப யாத்திரிகர்களின் முதல் தொகுதியினர் சபரிமலை புறப்பட இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சரினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இவ்விசேட விமானம் மூலம் செல்லவுள்ள அடியார்கள், கட்டுநாயக்க விமானநிலையத்திலிருந்து இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன், ஏனைய அமைசசர்களினாலும், அதிகாரிகளினாலும் வழியனுப்பும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## இலங்கை சமாதானப் பேச்சில் சிங்கப்பூர் பிரதமர் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தை நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் என்று சிங்கப்பூர் நாட்டின் பிரதம மந்திரி ஹோல் சொக் டோன் நம்பிக்கை தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் சிங்கப்பூர் விஜயத்தை மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சிங்கப்பூர் பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே, சிங்கப்பூர் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது நிலவும் நிலைமை குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாகவும் -

பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு இலங்கைக்குப் பூரண ஆதரவு தருவதாகவும் சிங்கப்பூர் பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

### சர்வதேச ....

காணாமற்போனவர்கள் தொடர்பாக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும், அடுத்த கட்ட சமாதானப் பேச்சுக்களின்போது இவ்விடயம் குறித்து அரசுடன் பேசும்படியும் தமிழ்ச்செல்வனிடமும் இத்தூதுக்குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக்கோரிக்கைகளைத் தாம் பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் எடுப்பதாக சு.ப.தமிழ்ச்செல்வன் இத்தூதுக்குழுவிடம் கூறியுள்ளார். காணாமற்போனவர்களின் பாதுகாவலர்கள் எதிர்நோக்கிவரும் துயரங்கள் குறித்தும் தமிழ்ச்செல்வனிடம் எடுத்துக் கூறப்பட்டது. யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும் இச்சந்திப்பில் உடனிருந்தார். (க,லி)

### காணாமற்....

வித்துள்ளனர்.

இச்சந்திப்பில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் பா.செல்வராசா கேட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் சங்கப்பிரதிநிதிகள் அரச அதிபரிடம் தமது உறவுகள் பற்றிய தகவல்களைப் பெற்றுத்தருமாறு அண்மையில் கோரியதை அடுத்து அரசாங்க அதிபர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். (ச)

### மேஜர் ஜென....

ஏற்படுத்தப்படமாட்டாது. அவ்வாறு பாதிப்பைத்தராத பட்சத்திலேயே மீள்குடியமர்வு இடம்பெறவேண்டும். விடுதலைப்புலிகளின் அனுதாபிகள் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் குடியேற்றப்பட்டால் அவர்கள் மீது விசேட கவனம் செலுத்துவதன் பொருட்டு உளவியல் நடவடிக்கைகளும், சிவில் விவகார நடவடிக்கைகளும் ராணுவத்தால் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும்.

மீள்குடியேற்றப்பகுதியில் குடியேறும் மக்கள் தம்முடன் தொலைத்தொடர்புக் கருவிகளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். அப்பகுதிகளுக்கு விருந்தினர்கள் செல்வதும் கட்டுப்படுத்தப்படும்.

மீள்குடியேற்றம் நடைபெற்றாலும் அப்பகுதியில் வாழ்வோர் உள்நுழையவும், வெளியேறவும் குறிப்பிட்ட நுழைவாயில்களே அனுமதிக்கப் படும் என்றும் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்திருப்பதாக 'தமிழ் கார்டியன்' மேலும் குறிப்பிட்டுள்ளது.

### இறுக்கநிலை...

தினை மீண்டும் நடாத்துவதற்கும் இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் தளபதிகளான கேணல் கருணா மற்றும் கேணல் தீபன் ஆகியோரையும், யாழ். இராணுவத தளபதியான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவையும் மீண்டும் சந்திக்க வைப்பதற்கும் முயற்சி மேற்கொள்ளப்படவிருக்கிறது. இவ்வாறான விடயங்கள் குறித்து விடுதலைப்புலிகளுடன் முன்கூட்டியே பேச்சு நடாத்துவதற்காகவே பேனாட் குணதிலக கிளிநொச்சிக்கு அவசரமாக விஜயம் செய்யவுள்ளார்.

அதேவேளை- உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களின் மீள்குடியேற்றம் செய்யப்படும்போது, மிகவும் முக்கியமான வேறும் பல விடயங்களையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். (200)

### ஹக்கீம்....

கப்பட்டதுடன் அலங்காரங்களும் அறுத்தெறியப்பட்டன. அம்பாறையில் ஹக்கீம் குழுவினர் கூட்டம் நடத்த விடப்போவதில்லை என அதாவுல்லா குழுவினர் எச்சரித்து விட்டுசென்றதாக தெரிவிக்கப்படுகிறது. (08)

### கட்சியை....

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழே போடாதவரை அவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தக்கூடாது. எந்தவொரு சமஷ்டி நாடுகளும் ஆயுதப்படைகளை மாநில அரசாங்கங்கள் வைத்திருக்க அனுமதிக்கவில்லை என்றும் அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார்.

**வாசகர்களே, வாடிக்கையாளர்களே**

நமது ஈழநாட்டில் விளம்பர செய்வதற்கு
உங்களுக்கு அருகிலேயே
இனி எமது விளம்பர முகவர்கள்...!

**நமது ஈழநாடு விளம்பர முகவர்**




மு.சுந்தரலிங்கம்
சதாபொன்ஸ்
அல்வாய் கிழக்கு, அல்வாய
021-2263206

**ஸ்ரார் கல்வி நிலையம்**
சுன்னாகம்
(A/L 2005 கலை, வர்த்தக, கணித வகுப்புக்கள்)
ஆரம்பம் 05-01-2003
ஞாயிறு 3.00 மணி

பொருளியல்:- மோகன்
கணக்கீடு:- வின்சன்
வணிகக்கல்வி:- சுஜன்
இணைந்த கணிதம்:-கோணேஸ்
கிறிஸ்தவம்:-றெஜினா
தமிழ்:- பாலா
இந்து நாகரீகம்:- சோதி
அளவையியல்:- R.P.சர்மா
நாடக அரங்கியல்:- ரமேஷ்
புவியியல்:-ஜெகன்
(076)

SEMINAR AND PUBLIC LECTURE
ON
LITERATURE IN ENGLISH
By
PROFESSOR.CHELVA CANAGANAYAGAM
(University of Toronto)

| Date | Venue | |
|---|---|---|
| 29.12.2002 (4.00-5.00 p.m) | Library Auditorium, University of Jaffna. | A Public Lecture |
| 30.12.2002 & 31.12.2002 (9.00-12.00& 3.00-5.00 p.m) | Library Auditorium, University of Jaffna. | For the students |

ALL ARE WELCOME

Head and Staff
Dept. of Linguistics and English
University of Jaffna.
(078)

**TNT யின் விசேட விலைச் சலுகை!**
**Loving Friends,**

புதுவருடம், தைப்பொங்கலை முன்னிட்டு யாழ்.மண்ணில் முதன் முதலாக TNT நிறுவனம் தனது பொதி விநியோக சேவையில் பருவ காலப் பொதியினை (Seasonal Box) பாரிய விலைக் குறைப்புடன் அறிமுகம் செய்துள்ளது என்பதை மனமகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகிறோம். இதன் மூலம் விசேடமாக தயாரிக்கப்பட்ட 1Kg, 3Kg பருவகாலப் பெட்டிகளில் வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவினர், நண்பர் களுக்கு மிகவும் குறைந்த கட்டணத்தில் 3 நாட்களிலும், உள்நாட்டில் கொழும்பு, நீர்கொழும்பு, கண்டி, நுவரெலியா, குருநாகல், அவிசாவளை போன்ற இடங்களுக்கு மிகவும் குறைந்த கட்டணத்தில் 24 மணி நேரத்திலும் புதுவருட, தைப்பொங்கல் பரிசுகள், Cardகள், அன்புப் பரிசுகளை உடனுக்குடன் அனுப்பிட ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் உடனடியாக விரையுங்கள்.

TNT கூரியர் சேவை,
139, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 222 3771.

நாங்கள் உங்கள் அன்பளிப்புப் பொதிகளை மட்டுமல்ல, அவற்றோடு உங்கள் அன்பினையும் எடுத்துச் சென்று சேர்க்கின்றோம். இவ்விசேட சலுகை 2003 ஜனவரி 15 வரை மட்டுமே.
(சி-374)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.